## நடப்பு நிகழ்வுகள்: ஜனவரி 20, 2017

**1. பெருகிவரும் தொற்று நோய்களுக்கு புதிய தடுப்பு மருந்து கண்டுபிடிக்க, 2017 உலக பொருளாதார அரங்கில் (WEF) "CEPI" அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டுள்ளது. CEPI என்பதன் விரிவாக்கம் என்ன ?**

A. Coalition for Epidemic Preacher Innovations
B. Coalition for Epidemic Preparative Innovations
C. Coalition for Epidemic Practicable Innovations
D. Coalition for Epidemic Preparedness Innovations

**விடை: D. Coalition for Epidemic Preparedness Innovations**

பெருகிவரும் தொற்று நோய்களுக்கு புதிய தடுப்பு மருந்து கண்டுபிடிக்க Coalition for Epidemic Preparedness Innovations (CEPI) அதிகாரபூர்வமாக 2017 உலக பொருளாதார அரங்கில்(WEF) தொடங்கப்பட்டுள்ளது. ஜெர்மனி, ஜப்பான் மற்றும் நார்வே அரசாங்கங்கள் அதேபோல் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் வெல்கம் டிரஸ்ட் ஆகியவற்றிடம் இருந்து $ 460 மில்லியன் ஆரம்பநிதி கொண்டு CEPI அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் CEPI குழு, பின்வரும் 3 தொற்றுநோய்களுக்கு இலக்கு வைத்துள்ளது: மத்திய கிழக்கு சுவாச நோய் (MERS) -coronavirus, லாசா காய்ச்சல் மற்றும் Nipah வைரஸ். அனைத்து மூன்று நோய்களும் பெரிய திடீர்தோன்றல்களை ஏற்படுத்தும் சாத்தியம் கொண்டவை மற்றும் தொற்றுநோய் பரவுவதற்கு முன் இந்த வைரஸ்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு சக்திவாய்ந்த தடுப்பூசிகளை தயார் செய்ய வேண்டும் என்பதே இலக்கு. இக்குழு,எபோலா, மார்பேர்க் மற்றும் ஜிகா வைரஸ்கள்களின் ஆராய்ச்சிக்கும் ஆதரவு வழங்கலாம்.

**2. இந்தியப் பெருங்கடல் ரிம் சங்கத்தின் (Indian Ocean Rim Association - IORA) தலைமையகம் எங்குள்ளது ?**

A. இந்தோனேஷியா
B. இந்தியா
C. மொரிஷியஸ்
D. ஆஸ்திரேலியா

**விடை: C. மொரிஷியஸ்**

இந்தியப் பெருங்கடல் ரிம் சங்கத்தின் (IORA) உறுப்பு நாடுகள் சமீபத்தில், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SME) துறையில் ஒத்துழைப்பு வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புது தில்லியில் நிறைவு செய்துள்ளது. சுமார் 14 IORA-

களில் இருந்து 29 பிரதிநிதிகள் புரிந்துணர்வு ஒப்பந்ததை இறுதி செய்ய 2-நாள் பயிற்சியில் கலந்து கொண்டனர். உறுப்பு நாடுகள் தங்கள் பகுதியில் சிறிய மற்றும் நடுத்தர வளர்ச்சியில்(SMEs) ஒருவருக்கொருவர் உதவ ஒரு பொதுவான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஒப்புக் கொண்டுள்ளனர். புரிந்துணர்வின் கவனமானது, தங்கள் நாடுகளில் SME அபிவிருத்தியில் ஈடுபடும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள், சங்கங்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் மத்தியில் இணைப்புகள் மற்றும் கூட்டணிகளை இறுதி செய்வதாகும். இந்தியப் பெருங்கடலை ஒட்டிய கடலோர மாநிலங்களை கொண்ட ஒரு சர்வதேச அமைப்பே IORA ஆகும். அது ஒரு பிராந்திய அரங்கு, இயற்கையில் முத்தரப்பு தன்மையுடையது, அரசு, வர்த்தக மற்றும் கல்வி பிரதிநிதிகளை ஒன்றாக கொண்டுவந்து அவர்கள் மத்தியில் ஒத்துழைப்பு மற்றும் நெருங்கிய தொடர்புகளை ஊக்குவிக்கிறது. IORA தலைமையகம் மொரிஷியஸின் Ebene நகரத்தில் அமைந்துள்ளது.

### 3. காம்பியாவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளவர் யார் ?

A. Dawda Jawara
B. Adama Barrow
C. Yahya Jammeh
D. Saihou Sabally

**விடை: B. Adama Barrow**

2016 ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, ஐக்கிய ஜனநாயக கட்சி (யுடிபி) உறுப்பினரான Adama Barrow, ஜனவரி 19, 2017 அன்று செனகலின் தக்காரில் உள்ள காம்பியன் தூதரகத்தில் ஒரு விழாவில் காம்பியாவின் 3-வது ஜனாதிபதியாக பதவியேற்றார். ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்திற்கு முன், இவர் UDP-யின் பொருளாளராக இருந்தார் மற்றும் ஒரு ரியல் எஸ்டேட் நிறுவனத்தை நடத்தினார்.

### 4. "Story of an Escape" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?

A. கொனிஜெடி ரோசைய்யா
B. கோவிந்த் சிங் குர்ஜார்
C. சுர்ஜித் சிங் பர்னாலா
D. பி எஸ் ராமமோகன் ராவ்

**விடை: C. சுர்ஜித் சிங் பர்னாலா**

சமீபத்தில் காலமான பஞ்சாப் முன்னாள் முதல்வர் சுர்ஜித் சிங் பர்னாலா, “Story of an Escape” என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். இந்தியாவின் பல்வேறு இடங்களில் வாழ்ந்த தனது மாறுபட்ட வாழ்க்கை அனுபவங்களை பற்றிய நாவல் இது.

**5. 2017 JLL City Momentum Index (CMI)-ல் எந்த நகரம் முதலிடத்தில் உள்ளது ?**

A. பெங்களூரு
B. ஹோ சி மின் நகரம்
C. ஹைதெராபாத்
D. ஷாங்காய்

**விடை: A. பெங்களூரு**

2017 JLL City Momentum Index (CMI) 4-வது ஆண்டு பதிப்புப்படி, 137 நகரங்களில் மிகவும் சக்தி வாய்ந்த நகரமாக இந்தியாவின் தொழில்நுட்ப மையமான பெங்களூரு திகழ்கிறது. டாப் 10 பட்டியலில் உள்ள மற்ற நகரங்கள் பின்வருமாறு: ஹோ சி மின் நகரம் (2-வியட்நாம்), சிலிக்கான் பள்ளத்தாக்கு (அமெரிக்கா), ஷாங்காய் (சீனா), ஹைதெராபாத் (இந்தியா), லண்டன் (இங்கிலாந்து), ஆஸ்டின் (அமெரிக்கா), ஹனோய் (வியட்நாம்), பாஸ்டன் (அமெரிக்கா) மற்றும் நைரோபி (கென்யா). சிகாகோ சார்ந்த நகரங்கள் ஆராய்ச்சி மையம் வெளியிட்ட குறியீட்டின்படி, மக்கள் தொகை, இணைப்பு, தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, கல்வி, கட்டமைப்பு, ரியல் எஸ்டேட் முதலீடு ஆகியவற்றை JLL அளவிடும் மற்றும் மிகவும் ஆற்றல்மிக்க நகரங்களை தேர்ந்தெடுக்கும் முக்கிய அடிப்படை சொத்துக்களின் விலை ஆகும். பட்டியலில் உள்ள மற்ற இந்திய நகரங்களில் 5 வது இடத்தில் ஹைதெராபாத், புனே (13), சென்னை (18), தில்லி (23) மற்றும் மும்பை (25) இடத்தில் உள்ளன.

**6. திரிபுரா மின்சார மேம்பாட்டு திட்டத்திற்கு, உலக வங்கி (WB) எவ்வளவு தொகை ஒப்புதல் அளித்துள்ளது ?**

A. ரூ 1,400 கோடி
B. ரூ 1,548 கோடி
C. ரூ 1,231 கோடி
D. ரூ 1,376 கோடி

**விடை: D. ரூ 1,376 கோடி**

உலக வங்கி(WB) சமீபத்தில், திரிபுராவில் மின்சார அமைப்பு நெட்வொர்க்கை முழுமையாக மேம்படுத்தவும், முன்னேற்றவும் ரூ.1,376 கோடி ஒதுக்கீடு

செய்துள்ளது. திட்டத்தின் கீழ், பெரும் எண்ணிக்கையிலான 132KV மற்றும் 33KV துணை மின்நிலையங்கள் கட்டப்பட்டு மற்றும் 5 கட்டங்களாக மேம்படுத்தப்படும். SPML Infra Ltd முதல் கட்ட ஒப்பந்ததை பெற்றுள்ளது மற்றும் ரூ 461 கோடி செலவிடப்படவுள்ளது.

**7. எந்த அணி 2017 ப்ரோ ரெஸ்லிங் லீக்கை (Pro Wrestling League) வென்றுள்ளது ?**

A. பஞ்சாப் ராயல்ஸ்
B. ஹரியானா ஹாமர்ஸ்
C. மும்பை மஹராத்தி
D. உ.பி. தங்கல்

**விடை: A.பஞ்சாப் ராயல்ஸ்**

பஞ்சாப் ராயல்ஸ் அணி, புது தில்லியில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் 5-4 என்ற புள்ளிகளில் ஹரியானா ஹாமர்ஸ் அணியை தோற்கடித்து 2017 ப்ரோ ரெஸ்லிங் லீக்கை வென்றுள்ளது.

**8. இந்தியாவின் 2017 குடியரசு தினவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளவர் யார் ?**

A. முகமதின் பின் சயீத் அல் நஹ்யான்
B. முகமது பின் சயீத் அல் நஹ்யான்
C. மிர்சா சயீத் பின் சுல்தான் அல் நஹ்யான்
D. சயீத் பின் சுல்தான் அல்-நஹ்யான்

**விடை: B. முகமது பின் சயீத் அல் நஹ்யான்**

அபுதாபியின் பட்டத்து இளவரசர் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்(UAE) ஆயுதப் படைகளின் துணைத் தலைமை தளபதி ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான், இந்தியாவின் 2017 குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள் மற்றும் தொழிற்துறை தலைவர்கள் உட்பட உயர் நிலைக் குழுவை சேர்ந்தவர்கள் இவருடன் இணைந்து கொள்ளவுள்ளனர்.

**9. இந்திய மருத்துவ மற்றும் நறுமண தாவரங்கள் பற்றிய சர்வதேச கருத்தரங்கு, எந்த நகரத்தில் நடைபெற்றது ?**

A. சென்னை

B. ஷில்லாங்
C. புது தில்லி
D. புனே

**விடை: C. புது தில்லி**

இந்திய மருத்துவ மற்றும் நறுமண தாவரங்கள் மீதான 2 நாள் சர்வதேச கருத்தரங்கு, 2017 ஜனவரி 19 அன்று புது தில்லியில் நடைபெற்றது. இந்த சர்வதேச கருத்தரங்கம், ஆயுஷ் அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் நோக்கமானது, முக்கிய கொள்கைகள், நிறுவன மற்றும் உற்பத்தி உள்ளடக்கிய ஒழுங்குமுறை பிரச்சினைகள் மற்றும் சுற்றுச்சூழல், சட்டம் , சமூகம் , ஆர் & டி, பொருளாதாரம், வர்த்தகம், தொழில், உள்கட்டமைப்பு, விவசாயம் மற்றும் மார்கெடிங் ஆகியவற்றை மையமாக கொண்டு நுகர்வு மற்றும் மார்க்கெட்டிங் அமைப்பு (PCMS) ஆகியவற்றை அடையாளம் காணுதல் ஆகும். மருத்துவ மற்றும் நறுமண தாவரங்கள் சமூகத்தின் சுமார் 300 முக்கிய உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**10. இந்திய விளம்பர தர கவுன்சிலின் (Advertising Standards Council of India -ASCI) தலைமையகம் எங்குள்ளது ?**

A. புனே
B. புது தில்லி
C. கொல்கத்தா
D. மும்பை

**விடை: D. மும்பை**

இந்திய விளம்பர தர கவுன்சில் (ASCI), இந்திய விளம்பர துறையில் ஒரு சுய ஒழுங்குமுறை தன்னார்வ அமைப்பு ஆகும்.இது ஒரு அரசு சாரா நிறுவனம், இதன் தலைமையகம் மகாராஷ்டிராவின் மும்பையில் அமைந்துள்ளது. இப்பெயர் செய்திகளில் வர காரணம், ஆயுஷ் துறையில் தவறாக வழிநடத்தப்படும் விளம்பரங்களை இணைந்து கட்டுபடுத்த, சமீபத்தில் ஆயுஷ் அமைச்சகம் மற்றும் ASCI புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

## நடப்பு நிகழ்வுகள்: ஜனவரி 21 & 22 - 2017

**11. "Nasha Mukt compaign" எனப்படும் அடிமை படுத்துதல் இல்லாத திட்டத்தை எந்த மாநிலம் அறிமுகம் செய்துள்ளது?**

A. பஞ்சாப்

B. ஹரியானா
C. பீகார்
D. அஸ்ஸாம்

**விடை: C. பீகார்**

“Nasha Mukt compaign” எனப்படும் அடிமை படுத்துதல் இல்லாத திட்டத்தை பீகார் அறிமுகம் செய்துள்ளது.மாநிலத்தில் உள்ள எல்லா பஞ்சயத்துகளையிம் 11,000கி.மீ தூரத்தில் 2கோடி மக்கள் கொண்ட மனித சங்கலியை அமைத்து .”Nasha Mukt compaign” எனப்படும் அடிமை படுத்துதல் இல்லாத திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

**12. எந்த சர்வதேச நிறுவனம் இந்திய புதுமை குறியிடுகள்(III-india innovation index) எனப்படும் இந்தியாவின் புது கண்டுபிடிப்புகளை ஆராய்கிறது?**

A. International Monetary Fund (IMF)
B. World Intellectual Property Organization (WIPO)
C. Asian Infrastructure Investment Bank (AIIB)
D. Asian Development Bank (ADB)

**விடை: B. World Intellectual Property Organaization(WIPO)**

நிதி ஆயோக்,World economic Forum, World Intellectual Property Organaization(WIPO) மற்றும் கார்நெல் பல்கலைகழகம் இணைந்து இந்திய புதுமை குறியிடுகள்(III-india innovation index) பற்றி மதிப்பீடு செய்கின்றன. இதில் மதிப்பீடு பற்றி ஆராய ஒவ்வொரு நிறுவனமும் ஒவ்வொரு பிரதிநிதியை அனுப்பி வைத்து அந்த குழு மூலம் ஆராய்கிறது. அக்டோபர் 4-6,2017 அன்று, இந்திய பொருளாதார சமர்ப்பித்தளின் போது இதற்கான முதல் மதிப்பீடு வெளியிடபடும் என எதிர்பார்க்கபடுகிறது. பலதரப்பட்ட குறியிடுகள் ,புது கண்டுபிடிப்புகள் மற்றும் திட்டங்களின் ஒருங்கிணைப்பின் அடிப்படையில் வெளியிடபட்டுள்ளது. இதன் மூலம் நாட்டின் வளர்ச்சி,கல்வி நிறுவனங்களின் வலிமை,மனிதனின் ஆக்க மூலதனம் தொழில்துறை மற்றும் ஆய்வுகளின் வளர்ச்சியை உறுதிசெய்கிறது.

**13. இந்தியாவின் எந்த போர்கப்பல் முதல் முறையாக ATM வசதியை தன்னகத்தே கொண்டுள்ளது?**

A. INS விக்கரமாதித்யா
B. INS சிந்துகோஷ்
C. INS அறிஹன்ட்
D. INS விராத்

**விடை: A. INS விக்கரமாதித்யா**

இந்தியா கப்பற்படையின் பெரிய போர்க்கப்பல் மற்றும் விமான ஏந்தும் கப்பலான INS விக்கரமாதித்ய முதல்முறையாக ATM வசதியை தன்னகத்தே கொண்டுள்ளது. STATE BANK OF INDIA மூலம் 1500 ஊழியர்களுக்கு உதவுகிறது. ATM கடவு எண்கள் மாற்றம்,பணம் எடுத்தல்,பண இருப்பு போன்ற வசதிகளை அமைக்கப்பட்டுள்ளது. பணம் போடவும் வசதிகள் ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கபடுகிறது. அதுமட்டுமல்லாது, பணபரிவர்தனை,கடவு சிட்டு மாற்றங்கள், தொலைபேசி எண் பதிவேடு, வரவுசீட்டு போன்ற வசதிகளும் உள்ளன. ரஷ்யாவில் கட்டுமானம் செய்யப்பட்ட INS விக்கரமாதித்ய 2013 இந்தியாவிற்கு வழங்கப்பட்டது.

**14. FIFA அமைப்பின் நிதி முறை கழகத்தின் புதிய இந்திய உறுப்பினர் யார்?**

A. C R Viswanathan

B. Larsing Sawyan

C. Subrata Dutta

D. Praful Patel

**விடை: D. பிரபுல் படேல்(Praful Patel)**

பிரபுல் படேல் என்பவர் AIFF எனப்படும் இந்திய கால்பந்து கழகத்தின் தலைவராவர். தற்போது FIFA அமைப்பின் நிதி முறை கழகத்தின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். 2017-2021 வரை பதவி வகிப்பார். நிதி முறை கழகத்தின் பணிகளை மேற்பார்வையிடுதல் மற்றும் நிதிமுறைகள் பற்றிய ஆய்வை FIFA குழுமத்திடம் சமர்பிப்பார்.

**15. இந்தியாவில் தேசிய வாக்களர் தினம் கடைபிடிக்கபடும் நாள்?**

A. ஜனவரி 25

B. ஜனவரி 22

C. ஜனவரி 23

D. ஜனவரி 24

**விடை: A. ஜனவரி 25**

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25 அன்று தேசிய வாக்களர் தினம் கடைபிடிக்கபடுகிறது. ஏனெனில் தேர்தல் ஆணையம் ஜனவரி 25 அன்றுதான்

தொடங்கப்பட்டது. 18 வயது நிரம்பிய எவரும் தனது வாக்குகளை பதிவிட தகுதி பெற்றுள்ளனர் என்பதை ஊக்குவிப்பதற்காக இந்த நாள் கடைபிடிக்கபடுகிறது.

**16. எந்த இந்திய கிராமம் NGO எனப்படும் அரசுசாரா நிறுவனத்தின் புதுமைக்கான UNWTO விருதை பெற்றுள்ளது?**

A. Khandalavadi village

B. Govardhan Eco village

C. Dhasai village

D. Akodra village

**விடை: B. Govardhan Eco village**

ISKCON எனப்படும் சர்வதேச கிருஷ்ணா சமூக அமைப்பின் கோவர்த்தன் எகோ கிராமம் UNWTO விருதை பெற்றுள்ளது. இந்த விருதானது NGO மூலம் உலக அளவில் சுற்றுலா துறையில் புது சாதனை படைபவர்களுக்கு கொடுக்கபடுகிறது. ஸ்பெயினில் நடைபெற்ற UNWTO ஆண்டு விழாவின் போது வழங்கப்பட்டது. இது GEV அமைப்பின் நிறுவனர் HH ராதநாத் சுவாமி மகாராஜா நினைவாக வழங்கப்பட்டது. ISKCON தலைமையகம் மேற்கு வங்காளத்தில் உள்ள மாயபுரில் உள்ளது. இதன் முக்கிய நோக்கம் ஆனது கிருஷ்ணரின் பக்தி, யோகாவை பரப்புவதாகும்

**17. 2017 ஆண்டிற்கான உலக அழகிகளுக்கான அணிவகுப்பில் கலந்துகொள்ளும் இந்திய நடுவர்?**

A. சுஷ்மிதா சென்

B. பிரியங்கா சோப்ரா

C. ஐஸ்வர்யா ராய் செய்தல்

D. ரோஷ்மித ஹறிமுர்த்தி

**விடை: A. சுஷ்மிதா சென்**

சுஸ்மிதா சென், 2017 ஆண்டிற்கான 65 வது உலக அழகிகளுக்கான அணிவகுப்பில் இருந்த இந்தியாவை சேர்ந்த நடுவராக கலந்துகொண்டு இறுதி முடிவுகளை அளிக்கவுள்ளார். இவர் முன்னால் உலக அழகியாகவும், பாலிவூட் நடிகையகவும் இருந்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவிலிருந்து உலக அழகிக்கான கிரிடத்தை பெற்ற முதல் இந்திய பெண் சுஸ்மிதா சென் ஆவர். ஜனவரி 30 அன்று பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரம் மணிலாவில் ஆசியா அரேனவில் நடக்க உள்ள இதனை இந்தியாவின் சார்பாக ரோஷ்மிட ஹறிமுர்த்தி பங்கேற்க உள்ளார்

**18. “60 Indian Poets” எனப்படும் புத்தகத்தை எழுதியவர்?**

A. Amitav Ghosh
B. Vikram Seth
C. Jeet Thayil
D. Arun Kolatkar

**விடை: C. Jeet Thayil**

“60 Indian Poets” என்ற புத்தககம் ஜீத் தாயில் (Jeet Thayil) என்பவரல் எழுதபப்பட்டது. இதில் கவிஞர்களின் தந்திரங்கள் மற்றும் கைவினைகளில் சிறந்த ஆசானாக எவ்வாறு இருப்பது பற்றி குறியிள்ளனர். 55 வருட இந்திய காவியங்களின் வரலாற்றை ஆங்கிலத்திலும், மேலும் கவிஞர்களின் தோற்றம் பற்றியும் கூறியுள்ளார். இதில் indinan-ness எனப்படும் இந்தியா கவிஞர்களின் தோற்றம் பற்றி கூறவும் முயன்றுள்ளார்.

**19. 2017 ஆண்டிற்கான ஒருங்கிணைந்த தளபதிகளின் மாநாடு நடைபெற்ற இடம்?**

A. அசாம்
B. ஆந்திரப் பிரதேசம்
C. மகாராஷ்டிரா செய்தல்
D. உத்தரகண்ட்

**விடை: D. உத்தரகண்ட்**

உத்தரகண்ட் மாநிலம் டேராடுனில் உள்ள இந்திய இராணுவ அக்காடமியில் 2017 ஆண்டிற்கான ஒருங்கிணைந்த தளபதிகளின் மாநாடு நடைபெற்றது. முக்கிய நோக்கமாக ஜம்மு & காஸ்மீர் line of control பகுதியின் பதற்ற சூழநிலையின் பாதுகாப்பு மற்றும் சர்ஜிகள் இடையூறு பற்றி விவாதிக்கப்பட்டது. மாநாடு பிரதமரால் தொடங்கப்பட்டது. இதில் அனைத்து இராணுவ விமானபடை மற்றும் கப்பற்படை தளபதிகளும் பங்கேற்றனர். மூன்று முக்கிய தளபதிகள் பங்கேற்ற முதல் ஒருங்கிணைந்த தளபதிகளின் மாநாடு இது என்பது குறிப்பிடத்தக்கது. இதில் 2016 இல் ஆற்றிய சேவைகள் பற்றி பேசபட்டன.

**20. குழந்தைகளுக்கிடையே நிதி பற்றிய கல்வி அறிவை வளர்க்க கூடிய ”F@SCHOOL” விழாவை எந்த கிராமின் வங்கி நடத்தியது?**

A. Uttarbanga Kshetriya Gramin Bank
B. Kerala Gramin Bank

C. Assam Gramin Vikash Bank

D. Rajasthan Gramin Bank

**விடை: B. Kerala Gramin Bank**

கேரளா கிராமின் வங்கியானது குழந்தைகளுக்கிடையே நிதி பற்றிய கல்வி அறிவை வளர்க்க கூடிய "F@SCHOOL" விழாவை நடத்தியது. இதன் மூலம் வங்கியின் பல்வேறு கிளைகள், பல்வேறு பள்ளிகளின் தொடக்க முறை கல்வி துறையிடம் நேரடியாக ஒப்பந்தம் செய்துள்ளது. பள்ளிகளில் பலதரப்பட்ட நிகழ்சிகளை நடத்த உதவுகிறது. அவை பின்வருவன நிதிமுறை சங்கம், பள்ளிகளில் வங்கி கணக்கு மாதிரிகளை உருவாக்குதல், ஜூனியர் டெபிட் சீட்டுகளை வழங்குதல், நிதிமுறை தொடர்பான வகுப்பறைகள், நிதிமுறை புத்தகங்கள், நிதிமுறை தொடர்பான போட்டிகள் போன்றவையாகும்.

## நடப்பு நிகழ்வுகள்: ஜனவரி 23 - 2017

**21. 2017 ஆண்டுக்கான மலேஷியா மாஸ்டர் கிராண்ட் பிரிக்ஸ் கோல்டு பாட்மின்டன் போட்டியில் வென்றவர்?**

A. சாய்னா நேவால்

B. பி.வி.சிந்து

C. பீட்ரிஸ் கொர்ரலேஸ்

D. சூ யா-சிங்க்

**விடை: A. சாய்னா நேவால்**

இந்தியாவின் சாய்னா நேவால் மலேஷியாவில் உள்ள சிபு சரவாக் உள்ளரங்க ஸ்டேடியத்தில் நடைபெற்ற 2017 ஆண்டுக்கான மலேஷியா மாஸ்டர் கிராண்ட் பிரிக்ஸ் கோல்டு பாட்மின்டன் போட்டியில் தாய்லாந்தின் போம்பவீ சொச்சுவங்கை 22-20, 22-20 என்ற கணக்கில் வென்றுள்ளார்.

**22. மொரிஷியஸ்ஸின் புதிய பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ளவர் யார்?**

A. நவீன் ராம்கூலம்

B. ப்ரவிந்த் சுகுணைத்

C. அனிருத் சசுகுணைத்

D. கசெம் உடீம்

**விடை: B. ப்ரவிந்த் சுகுணைத் (Pravind Jugnauth)**

மொரிஷியஸ்ஸின் புதிய பிரதமராக ப்ரவிந்த் சுகுணைத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதற்கு முன் இருந்த அமினா குறிஇப் பாகிம் தனது வயது முதிர்வின் காரணமாக ராஜினாமா செய்துள்ளார். ராஜினாமா கடிதத்தை தனது மகனான ப்ரவிந்த் சுகுணைத்திடம் கொடுத்துள்ளார். அதுமட்டுமின்றி iseland குறித்த தேர்தல் பணி காரணமாகவும் ராஜினாமா செய்துள்ளார். இந்த நிலையில், ப்ரவிந்த் சுகுணைத் ஜனவரி மாதம் 23 தேதி மொரிஷியஸ்ஸின் புதிய பிரதமராக பதவி ஏற்கஉள்ளார். இவர் Mouvement socialist millitant(MSM) என்ற கட்சியின் தலைவராவர். இது டிசம்பர் 2014 வரை தேசிய சட்டமன்றத்தில் பெரிய கட்சியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**23. தேசிய பெண் குழந்தைகள் தினம் இந்தியாவில் எந்த நாளில் கொண்டாடப்படுகிறது?**

A. ஜனவரி 22
B. ஜனவரி 23
C. ஜனவரி 24
D. ஜனவரி 25

**விடை: C. ஜனவரி 24**

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 ம் தேதி தேசிய பெண் குழந்தைகள் தினம் இந்தியாவில் கொண்டாடப்பட்டுவருகிறது. சமூகத்தில் உள்ள பெண்குழந்தைகள் எதிர்கொள்ளும் அனைத்து ஏற்றத்தாழ்வுகள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

**24. சமீபத்தில் காலமானா ஜஸ்வந்த் ராய் சர்மா, எந்த மொழியில் புகழ்பெற்ற கவிஞர்?**

A. தெலுங்கு
B. ஒடியா
C. தமிழ்
D. உருது

**விடை: D. உருது**

சமீபத்தில் காலமான ஜஸ்வந்த் ராய் சர்மா (89) புகழ்பெற்ற உருது கவிஞர் மற்றும் பாடலாசிரியர் ஆவார். இவர் மகாராஷ்டிராவில் காலமானார். "Naqsh Lyallpuri" என்ற புனை பெயரால் அறியப்பட்டவர். இவரது படைப்பில் சில "Main to hermodh par", "na jane kya hua", "jo tune chhu ilya" போன்றவையாகும்.

**25. போர் வீரர்களை பெருமை படுத்தும் வகையில், எந்த மைதானத்துக்கு முதன்முதலாக போர் வீரர் பெயர் சூட்டபட்டது?**

A. ஈடன் கார்டன் மைதானம், கொல்கத்தா
B. பெரோஸ் ஷா கோட்லா மைதானம், தில்லி
C. சின்னசாமி மைதானம், பெங்களூர்
D. வான்கடே மைதானம், மும்பை

**விடை: A. ஈடன் கார்டன் மைதானம், கொல்கத்தா**

கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானம தான் முதன்முதலாக போர் வீரர் பெயர் சூட்டபட்ட மைதானம். மேற்குவங்க கிரிக்கெட் சங்கம் தலைவர் சவுரவ் கங்குலி, இது போர் வீரர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வேண்டும் என்று கூறியுள்ளார். மேலும் ஜனவரி 22 இந்திய-இங்கிலாந்து ஒருநாள் போட்டிக்கு பின்னர் பெயர் மாற்றம் செய்யப்படும் என்று கூறினார். இந்திய ராணுவ இடத்தில் உள்ள இந்த மைதனமானது அடுத்த சர்வதேச ஆட்டத்திற்கு முன் இதன் பெயர் பிரபலம் ஆகிவிடும்.

**26. BCG (Boston Consulting Group) எனப்படும் பணியாளர்களின் புதிய திறமைகளை ஊக்கபடுத்தும் நிறுவனங்களை அங்கீகரிக்கும் அமைப்பு சமீபத்தில் எந்த நிறுவனத்துக்கு அங்கீகாரம் அளித்தது?**

A.டெஸ்லா
B.ஆப்பிள்
C.கூகிள்
D.அமேசான்

**விடை: B.ஆப்பிள்**

2016 ஆண்டிற்கான BCG அமைப்பின் சார்பாக பணியாளர்களின் புதிய திறமைகளை ஊக்கபடுத்தும் நிறுவனமாக ஆப்பிள் தேர்வாகி உள்ளது. உலகின் 50 நிறுவனங்கள் பட்டியலில், கூகிள் இரண்டாவது இடத்தில் உள்ளது அதை தொடர்ந்து டெஸ்லா மோட்டார்ஸ், மைக்ரோசாப்ட், அமேசான், நெட்ஃபிக்ஸ், சாம்சங், டொயோட்டோ, பேஸ்புக் மற்றும் IBM உள்ளது. BCGயின் 11 வது ஆண்டு கணக்கெடுப்பில், நிறுவனங்கள் எவ்வாறு புதுமையான முறைகளை கையாளுகின்றது மற்றும் எவ்வாறு, வேகமாக போட்டியாளர்களை விட முற்றிலும் புதிய வணிக முறைகளை உருவாக்கின்றது என்பதன் அடிப்படையில் தேர்வு செய்துள்ளது.

**27. "barbarian days A surfing life" என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?**

A. ஜுநாட் டயஸ்
B. மார்கஸ் ஜோச்க்
C. வில்லியம் ஃபின்னெகன்
D. சுனில் க்ஹில்னணி

**விடை: C. வில்லியம் ஃபின்னெகன்(William Finnegan)**

"barbarian days A surfing life" என்ற புத்தகம் வில்லியம் ஃபின்னெகன் என்பவரால் எழுதப்பட்டது. இந்த நாவல் ஒரு பழைய பள்ளியின் கதை, சமூக வரலாறு, இலக்கிய சாலை திரைப்படம், கடினமான படிப்படியாக முன்னேற்றம் பற்றிய ஆய்வு மற்றும் சிறிய கலைகள் பற்றிய அறிவு மிக்க சுயசரிதையாகும்.

**28. "Wave N Pay" தொடர்பற்ற அட்டை பின்வரும் எந்த வங்கிகள் மூலம் வழங்கபடுகிறது?**

A. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா
B. ஐசிஐசிஐ வங்கி
C. ஆக்சிஸ் வங்கி
D. பஞ்சாப் நேஷனல் வங்கி

**விடை: D. பஞ்சாப் நேஷனல் வங்கி**

"Wave N Pay" தொடர்பற்ற அட்டை பஞ்சாப் நேஷனல் வங்கி மூலம் டெல்லியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. Wave எனப்படும் அலைகள் மூலம் பரிவர்த்தனையை இந்த "Wave N Pay" தொடர்பற்ற அட்டை செய்கிறது. 2000 ரூபாய் வரை பண பரிவர்த்தனை செய்ய எந்த PIN எண்களை உள்ளிட அவசியம் இல்லை. இந்த அட்டை வைத்திருப்பவர்கள் தான் அதன் தவறான பயன்பாட்டிற்கு முழு பொறுப்பு உடையவர்கள். இந்த தொடர்பற்ற கடன் அட்டை விசா, பிளாட்டினம் போன்ற முறைகளில் தொடங்கப்பட்டது.

**29. "Aoba Velox-III" என்ற செயற்கைக்கோள் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. இது எந்த நாட்டினுடையது?**

A. அமெரிக்கா
B. சிங்கப்பூர்
C. ஐக்கிய ராஜ்யம் (UK)

D. சுவிச்சர்லாந்து

**விடை: B. சிங்கப்பூர்**

முதல் சிங்கப்பூர் செயற்கைக்கோளான "Aoba Velox-III" சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து விண்ணில் அதன் வட்டப்பாதையில் செலுத்தப்பட்டத்து. இது சிங்கப்பூர் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் மற்றும் ஜப்பான் நாட்டின் கியூஷூவில் நிறுவனம் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒரு கூட்டு முயற்சியாகும். இதன் மூலம் NTU மைக்ரோ ஒழுங்கு முறை, கியூஷூவின் கம்பியில்லா தொடர்பு முறை, நுகர்வோர் தர மின்னணு பாகங்கள் அமைப்பு போன்றவற்றை விண்வெளியில் இருந்து செயல் படுத்த முடியும்.

**30. 2017 ஆண்டுக்கான Pakke-Paga திருவிழா எந்த மாநிலத்தில் நடைபெற்று வருகிறது?**

A. அருணாசலப் பிரதேசம்
B. ஆந்திரப் பிரதேசம்
C. மேற்கு வங்கம்
D. மிசோரம்

**விடை: A. அருணாசலப் பிரதேசம்**

ஜனவரி 17 முதல் அருணாசலப் பிரதேசதில் 2 வது Pakke-Paga விழா- கிழக்கு கமெங் மாவட்டத்தில் செயஜோசவில் நடைபெற்று வருகிறது. இதனை மாநில யூனியன் அமைச்சர் கிரன் ரிச்சு தொடங்கிவைத்தார். 3 நாள் நடைபெரும் விழாவில் முக்கிய நோக்கம் "அழிந்து வரும் இனங்கள் மேம்பாடு மற்றும் அவற்றின் பாதுகாப்பு" பற்றிய விழிப்புணர்ச்சி பற்றியதாகும். விழா பார்வையாளர்கள் ரூ.5,000 குறைந்தபட்ச வருடாந்திர பங்களிப்பு மூலம் ஹோர்ன்பில் கூடு எனும் குருவியின் கூட்டை தத்தெடுக்க அனுமதி வழங்கபடுகிறது. 16 வனவிலங்கு பாதுகாப்பு தொண்டு நிறுவனங்கள் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். மாநில சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் செயஜியோ பகுதி வசிப்பவர்கள் இதனை சிறப்பாக நடத்தி உள்ளனர். பாகா என்றல் Nyishi மொழியில் ஹோர்ன்பில் என்று அர்த்தம்.

## நடப்பு நிகழ்வுகள்: ஜனவரி 24 - 2017

**31. பின்வரும் எந்த மாநிலம் சேவை பணியாளர்களுக்காக தபால் ஓட்டு சீட்டை மின்னணு சேவை பரிமாற்ற முறையில் அறிமுகம் செய்தது?**

A. கோவா

B. உத்தரப் பிரதேசம்
C. உத்தரகண்ட்
D. பஞ்சாப்

**விடை: A. கோவா**

இந்தியாவில் முதல் முறையாக சேவை பணியாளர்களுக்காக தபால் வாக்கெடுப்பை மின்னணு முறையில் பரிமாற்றம் செய்யும் சேவையை கோவா மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சேவை மூலம் வாக்காளர்கள், தபால் வாக்கு சீட்டை பதிவிறக்கம் செய்து அதை பூர்த்தி செய்து மின்னஞ்சல் வழியாக அனுப்ப முடியும். தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மின்னணு பதிவு மூலம் பெறப்பட்ட வாக்குகளை பதிவு செய்வார்கள். குறிப்பாக, கோவா மாநிலத்தில் பாதுகாப்பு, துணைப்படை மற்றும் பாராளுமன்ற சேவை துறையில் 822 சேவை பணி வாக்காளர்கள் உள்ளனர். இது தவிர, கோவா அனைத்து தொகுதிகளிலும் Voter-Verified Paper Audit Trail (VVPAT) இயந்திரங்கள் பயன்படுத்தும் முதல் இந்திய மாநிலமாகும்.

**32. தேசிய சுற்றுலா தினம் இந்தியாவில் எப்போது கொண்டாடப்படுகிறது?**

A. ஜனவரி 24
B. ஜனவரி 23
C. ஜனவரி 25
D. ஜனவரி 26

**விடை: C. ஜனவரி 25**

சுற்றுலாத்துறையின் முக்கியத்துவத்தை உணர்த்த ஒவ்வொரு வருடமும் ஜனவரி 25 இந்தியாவில் தேசிய சுற்றுலா தினம் கொண்டாடப்படுகிறது.

**33. உலக வங்கியின் உதவியுடன் எந்த மாநிலம் “e-health project” என்ற திட்டத்தை தொடங்கள்ளது?**

A. அசாம்
B. ஆந்திரப் பிரதேசம்
C. கர்நாடகா
D. கேரளா

**விடை: D. கேரளா**

உலக வங்கியின் உதவியுடன் கேரளா அரசு ஜனவரி 25 அன்று "e-health project" என்ற திட்டத்தை தொடங்கவுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு துறையிலும் நவீனப்படுத்தப்பட்ட தானியங்கி அமைப்பு மூலம் அனைத்து சுகாதார நிறுவனங்களும் இணைக்கப்பட்டு மக்களின் உடல்நலம் சார்ந்த தகவல்களை மின்னணு முறையில் சேகரித்து மக்கள் தொகை தரவுத்தளம் உருவாக்கப்படும். ஏற்கனவே சோதனை அடிப்படையில் திருவனந்தபுரம் மாவட்டத்தில் 12 சுகாதார அமைப்பு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**34. யார் தலைமையிலான குழு மத்திய அரசிடம் சமீபத்தில் "நிதி பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை" பற்றிய சட்டஅறிக்கையை சமர்பித்தது?**

A. என். கே சிங் குழு
B. எச் ஆர் கான் குழு
C. என் ஆர் மாதவ் குழு
D. எச் தேவராஜ் குழு

**விடை: A. என். கே சிங் குழு**

டெல்லியில் வடக்கு தொகுதியில் உள்ள மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லியின் அலுவலகத்தில் என். கே சிங் தலைமையிலான குழு திருத்தப்பட்ட "நிதி பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மை" பற்றிய சட்டஅறிக்கையை சமர்பித்தது. இந்த அறிக்கையை மத்திய அரசு ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருக்கும் நிதிப் பற்றாக்குறையை நிலையான சதவிதத்திற்கு மாற்றுவதை பற்றி ஆராய்ந்து தகுந்த மாற்று நடவடிக்கைகள் பற்றி இந்த குழு பரிந்துரை அளிக்கும். மேலும் நிதி விரிவாக்கம் மற்றும் நிதி குறைப்பு, கடன் விரிவாக்கம் மற்றும் கடன் குறைப்பு போன்றவற்றை பற்றிய தேவைகள் மாற்று நடவடிக்கை பற்றி ஆராயும்.

**35. 2017 ஆம் ஆண்டிற்கான ஜெய்பூர் இலக்கிய திருவிழாவின் கருப்பொருள் யாது?**

A. Freedom to Love: India at 70
B. Freedom to Dream: India at 70
C. Freedom to Space: India at 70
D. Freedom to Life: India at 70

**விடை: B. Freedom to Dream: India at 70**

பத்தாவது ஆண்டாக நடக்கும் இலக்கிய திருவிழா ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் ஜனவரி 19, 2017 அன்று தொடங்கியது. இதன் கருப்பொருள் "Freedom to Dream: India at

70" என்பதாகும். இந்த திருவிழாவின் போது நவீன இந்தியாவின் வரலாறு மற்றும் எதிர்காலம் பற்றிய விவாதங்கள் இடம்பெறும். 5 நாட்கள் நடக்கும் இந்த திருவிழாவில், கிட்டத்தட்ட 250 ஆசிரியர்கள், சிந்தனையாளர்கள், அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் பிரபலமான கலாச்சார பிராமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

**36. 2017 ஆம் ஆண்டில் எந்த காப்பீட்டு நிறுவனத்தால் Varishtha Pension Bima Yojana (VPBY) என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது?**

A. ICICI Prudential Life Insurance
B. Life Insurance Corporation of India
C. New India Assurance
D. HDFC Standard Life Insurance

**விடை: B. Life Insurance Corporation of India**

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு சமீபத்தில் Varishtha Pension Bima Yojana என்ற காபீட்டு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது பாதுகாப்பான முறையில் நிதி சேர்க்க உதவும் அரசின் திட்டமாகும். இதன் மூலம் அறுபது வயதிற்கு மேற்பட்ட வயதானவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வண்ணம் LIC உடன் இணைந்து செயல்படுத்தப்படும் காப்பிட்டு திட்டமாகும். வட்டி விகிதம் சந்தை நிலவரத்திற்கு ஏற்றவாறு இருக்கும். இத்திட்டத்தின் மூலம் மாதாந்திரம் / காலாண்டு / அரையாண்டு மற்றும் வருடாந்திரம் என்ற அடிப்படையில் பத்து ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு 8% என்ற விகித அடிப்படையில் ஓய்வூதியம் தர உத்தரவாதம் அளிக்கும்.

**37. காதி கிராம தொழில் கழகத்தின் Khadi & Village Industries Commission (KVIC) புதிய முதன்மை செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டவர்(CEO)?**

A. S Jaishankar
B. Rina Mitra
C. Anshu Sinha
D. Arun Kuma Jha

**விடை: C. Anshu Sinha (அன்ஷு சின்ஹா)**

மகாராஷ்டிராவை சேர்ந்த அன்ஷு சின்ஹா காதி கிராம தொழில் கழகத்தின் Khadi & Village Industries Commission (KVIC) புதிய முதன்மை செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனவரி 29, 2019 வரை இப்பதவியில் நீடிப்பார். KVICயானது கதர் மற்றும் கிராம தொழில் ஆணைய சட்டம், 1995 மூலம் நிறுவப்பட்டது. சிறு, குறு

மற்றும் நடுத்தர தொழில் அமைச்சகத்தின் கீழ் அங்கம் வகிக்கிறது. இதற்கு முன்னர் அருண் குமார் ஜஹா இப்பதவியை வகித்தார்.

**38. 2017 ஆம் ஆண்டிற்கான தேசிய பெண் குழந்தைகள் தினத்தின் கருப்பொருள் யாது?**

A. End child marriage

B. Safety and Development of girl child

C. Adolescent Girls: Issues and Challenges

D. Beti Bachao, Beti Padhao

**விடை: D. Beti Bachao, Beti Padhao**

டெல்லியில் ஜனவரி 24, 2017 அன்று தேசிய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் மூலம் கொண்டாடப்பட்ட தேசிய பெண் குழந்தைகள் தினவிழாவின் கருப்பொருளாக Beti Bachao, Beti Padhao என்ற வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த விழாவில் ஹிந்தி, மலையாளம், ராஜஸ்தானி, பஞ்சாபி போன்ற மொழிகளில் நடத்தப்பட்ட தொழில் முறை நடனக்கலைஞர்களின் விழிப்புணர்வு நிகழ்சிகள் உச்சகட்ட பலனை கொடுத்தது. ஒவ்வொரு வருடமும் ஜனவரி 24 அன்று சமுதாயத்தில் பெண் குழந்தைகள் ஆணுக்கு சமமாக கருதப்பட வேண்டும் என்ற நோக்கதிற்க்காக இந்த விழா கொண்டாடப்படுகிறது.

**39. "You Got Magic" என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?**

A. Neel Madhav

B. Tishani Doshi

C. Arun Kolatkar

D. T D Ramakrishnan

**விடை: A. Neel Madhav (நீல் மாதவ் )**

Neel Madhav [ நீல் மாதவ் ] என்ற மேஜிக் கலைஞரால் "You Got Magic" என்ற புத்தகம் எழுதப்பட்டது. இந்த புத்தகத்தில் குடும்பத்தில் உள்ளவர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரையும் ஆச்சரியப்படுத்தும் வகையில் பல அசாதரணமான வித்தைகள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

**40. நாகர்ஹோல் (Nagarhole) தேசிய பூங்கா எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?**

A. கர்நாடகா

B. ஆந்திரப் பிரதேசம்
C. கேரளா
D. தமிழ்நாடு

**விடை: A. கர்நாடகா**

நாகர்ஹோல்(Nagarhole) தேசிய பூங்கா கர்நாடக மாநிலத்தின் குடகு மற்றும் மைசூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது ராஜீவ் காந்தி தேசிய பூங்கா என்றும் அழைக்கப்படுகிறது. இந்த பூங்காவில் அடர்ந்த காடுகள், சிறு நீரோடைகள், மலைகள், பள்ளத்தாக்குகள், நீர்வீழ்ச்சிகள், புலிகள், இந்திய காட்டெருமை மற்றும் யானை ஆகியவையுடன் ஆரோக்கியமான உணவு சூழ்நிலை காணப்படுகிறது.

## நடப்பு நிகழ்வுகள்: ஜனவரி 25 - 2017

**41. 2017 ஆம் ஆண்டிற்கான தேசிய வாக்காளர் தினத்தின் கருப்பொருள் என்ன?**

A. Empowering young and future events
B. Inclusive and qualitative participation
C. Easy Registration, Easy Correction
D. Ethical Voting

**விடை: A. Empowering young and future events**

இந்திய தேர்தல் ஆணையம் தனது 7 வது தேசிய வாக்காளர் தினத்தை ஜனவரி 25, 2017 அன்று கொண்டாடியுள்ளது. இதன் கருப்பொருள் Empowering young and future events என்பதாகும். குடிமக்களை வாக்களிப்பில் ஈடுபடுத்துவதே இதன் நோக்கமாகும். இந்த தேசிய அளவிலான நிகழ்ச்சி டில்லியில் நடைபெற்றது. இந்த வாக்காளர் தினமானது இந்திய தேர்தல் ஆணையம் 1950 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நாளின் நினைவாக கொண்டாடப்படுகிறது. புதிதாக வாக்களிக்க தகுதி பெற்றவர்களை வாக்களிப்பில் பங்குபெற செய்வதே இதன் நோக்கமாகும். மேலும் வாக்காளர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இதன் மூலம் முயற்சிக்கப்படுகிறது.

**42. யார் தலைமையிலான முதலமைச்சர்களின் குழு சமீபத்தில் டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து தனது அறிக்கையை சமர்பித்தது?**

A. ராமன் சிங் குழு
B. சரபனந்த சொனோவல் குழு
C. சந்திரபாபு நாயுடு குழு

D. நிதிஷ் குமார் குழு

**விடை: C. சந்திரபாபு நாயுடு குழு**

டிஜிட்டல் பர்வர்தனையை அமல் படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை பற்றி ஆராய நரேந்திர மோடி தலைமையில் முதலமைச்சர்களின் குழு அமைக்கப்பட்டது. இந்த குழு சமீபத்தில் தனது அறிக்கையை சமர்பித்துள்ளது.
இந்த குழுவின் தலைவராக சத்திரபாபு நாயுடு செயல்பட்டுள்ளார். இந்த அறிக்கையின் மூலம் சிறு வணிகர்களுக்கும், வியாபாரிகளுக்கும் ஸ்மார்ட் மொபைல் வாங்க ஆயிரம் ரூபாய் மானியம் அளிக்கலாம் எனவும் இதன் மூலம் பணபரிவர்த்தனையை விட குறைந்த செலவில் டிஜிட்டல் முறையில் பரிவர்த்தனை மேற்க்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளது. மேலும் ரூ 50,000 மேலே பெரிய பரிமாற்றங்கள் நிகழும் போது வங்கி பண பரிவர்த்தனை வரி (BCTT) விதித்து பணபயன்பாட்டை கட்டுப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

**43. இந்திய அளவில் "Khelegi toh Khilegi" என்ற பெண்கள் கால்பந்து விளையாட்டிற்கான திட்டத்தை தொடங்கிய அமைப்பு எது?**

A. Nurturing Excellence in Sports Trust (NEST)
B. Indian Football Association (IFA)
C. All India Football Federation (AIFF)
D. Football Players' Association Of India (FPAI)

**விடை: A. Nurturing Excellence in Sports Trust (NEST)**

Nurturing Excellence in Sports Trust (NEST) என்ற அமைப்பானது 10 வயது முதல் 15 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு கால்பந்து விளையாட்டு பயிற்சிக்காக இந்திய அளவில் "Khelegi toh Khilegi" என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது. இது National Yuva Cooperative Society (NYCS) உடன் இணைந்து செயல்படுகிறது. இதன் மூலம் பெண் குழந்தைகள் பாலின வேறுபாடுகளை கடந்து ஒரே மாதிரியான ஆளுமை பண்பை வளர்த்து கொள்ள முடியும். இந்த அமைப்பின் முதல் நிகழ்வானது தியாகராஜ் மைதானம் டெல்லியில் நடைபெற்றது. சுமார் 700 பெண்களுக்கும் மேல் இதில் கலந்து கொண்டனர். மத்திய பெட்ரோலியம் மற்றும் எரிவாயு துறை அமைச்சர் தர்மேந்தர பிரதான் கொடியசைத்து விழாவினை தொடங்கி வைத்தார். (NEST) அமைப்பானது திறமையான விளையாட்டு வீரர்களை கண்டறிந்து அவர்களுக்கு பயிற்சியளித்து சர்வதேச அளவில் போட்டிகளில் பங்குபெற செய்து ஊக்கப்படுத்துகிறது.

**44. சமூக சேவைக்கான "தங்க மயில்" விருது போக்குவரத்து துறையின் கீழ் உள்ள விமான சேவை பிரிவில் எந்த விமான நிலையத்திற்கு வழங்கப்பட்டது?**

A. சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையம்
B. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சர்வதேச விமான நிலையம்
C. சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையம்
D. தில்லி சர்வதேச விமான நிலையம்

**விடை: D. தில்லி சர்வதேச விமான நிலையம்**

2016 ஆண்டுக்கான சமூக சேவைக்கான "தங்க மயில்" விருது போக்குவரத்து துறையின் கீழ் உள்ள விமான சேவை பிரிவில் தில்லி சர்வதேச விமான நிலையத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. ACI ASQ கணக்கெடுப்பின் படி தொடர்ந்து இரண்டு வருடங்களாக ஆண்டிற்கு 25-40 மில்லியன் பயணிகளை பெற்று முதலிடத்தில் உள்ளது.

**45. எந்த நாடு முதல் முதலாக இராணுவ தொலை தொடர்பிற்கான "Kirameki -2" என்ற செயற்கைகோளை விண்ணில் அனுப்பியுள்ளது?**

A. பிரேசில்
B. தென் ஆப்ரிக்கா
C. ஜப்பான்
D. தெற்கு சூடான்

**விடை: C. ஜப்பான்**

ஜப்பான் நாடு முதல் முதலாக இராணுவ தொலை தொடர்பிற்கான "Kirameki -2" என்ற செயற்கைகோளை விண்ணில் அனுப்பியுள்ளது. ஜப்பான் விண்வெளி ஆய்வு முகமை மற்றும் Tanegashima விண்வெளி மையம் இணைந்து H-2A கேரியர் ராக்கெட் மூலம் பிராட்பேண்ட் திறனை அதிகரிக்க இந்த முயற்சியை கையாண்டுள்ளது. இந்த செயற்கை கோளின் மூலம் ஜப்பான் கடற்படை மற்றும் விமானபடையின் தொலை தொடர்பு வேகம் நேரடியாக பன்மடங்கு அதிகரிக்கும். மேலும் இது இந்திய பெருங்கடலின் மீது நிலை நிருத்தப்படுவதால் தெற்கு சூடான் மற்றும் சோமாலிய கடல் கொள்ளையர்களையும் கண்காணிக்க முடியும். Kirameki-2வானது ஜப்பான் பாதுகாப்பு அமைச்சகத்தின் DSN கழகம் மூலம் உருவாக்கப்பட்ட 15 ஆண்டு ஆயுட்காலம் கொண்ட எக்ஸ்-பேண்ட் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் ஆகும்.

**46. உலகின் மிகப்பெரிய சூரிய பூங்கா எந்த நாட்டில் அமைக்கப்பட்டது?**

A. சீனா
B. இந்தியா
C. பூட்டான்
D. மியான்மார்

**விடை: A. சீனா**

உலகின் மிகப்பெரிய சூரிய பூங்கா சீன நாட்டின் சீனாவின் மேற்கு மாகாணமான சிங்காயில் உள்ள Longyangxia அணையின் மீது உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சூரிய பூங்கா 27 சதுர கிலோ மீட்டர் பரப்பை ஆக்கிரமித்து 6 பில்லியன் யுவான் செலவில் கட்டப்பட்டது. இதன் மூலம் சுமார் 850 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும்.

**47. "The Future of India" என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?**

A. Bimal Jalan
B. C Rangarajan
C. Y Venugopal Reddy
D. Bipin Ganatra

**விடை: A. Bimal Jalan**

"The Future of India" என்ற புத்தகம் முன்னால் ரிசர்வ் வங்கி ஆளுநர் Bimal Jalan என்பவரால் எழுதப்பட்டது. இந்த புத்தகமானது அரசியல், பொருளாதாரம், அரசாங்கம் ஆகியவற்றிற்கு இடையேயான ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மக்களாட்சி அரசில் ஏற்படுத்தும் எதிர்கால மாற்றங்களை பற்றி கூறுகிறது.

**48. அமைதி மற்றும் இறையாண்மைக்கான வெனிசுலா அரசு வழங்கும் Hugo Chavez Prize விருதை முதலாவதாக பெற்றவர் யார்?**

A. Barack Obama
B. Vladimir Putin
C. Nicolas Maduro
D. Juan Manuel Santos

**விடை: B. Vladimir Putin (விளாடிமிர் புதின்)**

ரஷ்ய அதிபர் Vladimir Putin (விளாடிமிர் புதின்) அமைதி மற்றும் இறையாண்மைக்காக போராடியதற்காக வெனிசுலா அரசு வழங்கும் Hugo Chavez Prize விருதை முதலாவதாக

பெற்றுள்ளார். அவருக்கு சாவேஸ் சிலை மினியேச்சர் பிரதி வழங்கப்பட்டது. இந்த சமாதான பரிசு சோசலிச தலைவரான ஹியூகோ சாவேஸ் நினைவாக வெனிசுலா அதிபர் நிக்கோலா Maduro அவர்களால் உருவாக்கப்பட்டது.

**49. 7th Dafabet Masters title பெற்று சாதனை புரிந்த Ronnie O'Sullivan எந்த நாட்டை சேர்ந்தவர்?**

A. அமெரிக்கா
B. ஜெர்மனி
C. ஐக்கிய ராஜ்யம்(UK)
D. பிரான்ஸ்

**விடை: C. ஐக்கிய ராஜ்யம்(UK)**

பிரிட்டிஷ் தொழில்முறை ஸ்னூக்கர் விளையாட்டு வீரர் ரோனி ஓ'சல்லிவன், அலெக்சாண்ட்ரா பேலஸ்,லண்டனில் நடைபெற்ற போட்டியில் 10-7 என்ற கணக்கில் ஜோ பெர்ரியை தோற்கடித்து வரலாற்று சாதனை நிகழ்வாக 7th Dafabet Masters titleயை வென்றுள்ளார். இந்த வெற்றியின் மூலம், ஓசல்லிவன், ஸ்டீ்பன் ஹென்றி சாதனையை முறியடித்துள்ளார். ஸ்டீ்பன் ஹென்றி ஸ்னூக்கர் விளையாட்டு வரலாற்றில் மிக பெரிய வீரர்களில் ஒருவராக கருதப்படுகிறார்.

**50. "Ababeel" என்ற பரவளைய பாதை ஏவுகணையை சோதித்த நாடு எது?**

A. இந்தியா
B. வங்காள தேசம்
C. ஆப்கானிஸ்தான்
D. பாக்கிஸ்தான்

**விடை: D. பாக்கிஸ்தான்**

தரையில் இருந்து தரையில் உள்ள இலக்கை தாக்க கூடிய "Ababeel" என்ற ஆயுதங்களை சுமந்து செல்லக்கூடிய ஏவுகனையை ஜனவரி 24,2017 அன்று பாகிஸ்தான் சோதித்து உள்ளது. அதிகபட்சமாக 2200km வரை சென்று தாக்க கூடியது. இதனை Multiple Independently Targetable Reentry Vehicles (MIRV) மூலம் எங்கு வேண்டுமானாலும் கொண்டு சொல்ல முடியும். சாதாரன ஆயுதங்களையும் அணு ஆயுதங்களையும் சுமந்து செல்லக்கூடியது. இது இந்தியாவின் பிரித்திவி மற்றும் அஸ்வின் ஏவுகணைகளுக்கு இணையான திறன் கொண்ட பரவளைய பாதை ஏவுகணையின் மேம்பட்ட வடிவமாகும்.

## நடப்பு நிகழ்வுகள்: ஜனவரி 26 - 2017

**51. சமீபத்தில் காலமான அலெக்சாண்டர் கடகின், இந்தியாவிலிருந்து எந்த நாட்டின் தூதராக இருந்தார்?**

A. பிரேசில்
B. ரஷ்யா
C. இந்தோனேஷியா
D. சிங்கப்பூர்

**விடை: B. ரஷ்யா**

சனவரி 26,2017 அன்று டெல்லியில் அலெக்சாண்டர் கடகின் காலமானர். இவர் 2009 இருந்து அவரது இறப்பான 2017 வரை இந்தியாவிலிருந்து ரஷ்யாவிற்கான தூதுவராக பணியாற்றினார். இவரே அதிக காலம் தூதுவராக பணியாற்றியவர். அதுமட்டுமின்றி இந்தியாவிலிருந்து பல நாடுகளுக்கு தூதுவராக பணியாற்றியவர்.

**52. எந்த மாநில அரசால் இ-சுகாதாரம் திட்டம் எனப்படும் சுகாதார நல தகவல்களை வழங்க "ஜீவன் ரேகா" என்பது தொடங்கப்பட்டது?**

A. சத்தீஸ்கர்
B. தமிழ்நாடு
C. கேரளா
D. அசாம்

**விடை: C. கேரளா**

திருவனந்தபுரத்தில் கேரளா முதல்வர், பினராயி விஜயனால் சமீபத்தில் தொடங்கப்பட்ட வைக்கப்பட்ட இ-சுகாதாரம் திட்டமான "ஜீவன் ரேகா" மக்கள் தொகை சார்ந்த மின்னனு சுகாதார பதிவுகள் உருவாக்க தொடங்கப்பட்டது. மக்களுக்கு சுகாதார தகவல் மற்றும் திறமையான சுகாதார சேவையை மையப்படுத்தி தகவல் வழங்க இந்தியாவில் கேரளா முதல் முயற்சி மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் மருத்துவமனைகளில் நல்ல மருத்துவமனை மேலாண்மை அமைப்பு மற்றும் நோயாளிகளுடனான நட்பு சூழலை உருவாக்குவதில் உதவும். நோயாளியின் ஒரு முறை சேகரிக்கப்பட்ட உடல்நிலை தகவல் மூலம் மாநிலத்தில் உள்ள எந்த மருத்துவமனைகளிலும் அந்த நோயாளி தொடர்ச்சியான சிகிச்சை பெற உதவும். முதல்கட்டமாக இத்திட்டத்தின் கீழ், 7 மாவட்டங்களில் Rs.92.12 கோடி செலவில் பணிகள் மேற்கொள்வது பற்றி விவாதிக்கப்பட்டது.

**53. டிஜிட்டல் பணபரிவர்த்தன முறையை ஏற்றுக்கொண்ட மாவட்டங்களை ஊக்கபடுத்த "முதல்வருடைய விருது" எந்த மாநில அரசால் வழங்கப்படுகிறது?**

A. மத்தியப் பிரதேசம்
B. அசாம்
C. ராஜஸ்தான்
D. கேரளா

**விடை: B. அசாம்**

அசாம் முதல்வர் சர்பானந்த சோனோவால், அசாமில் டிஜிட்டல் பணபரிவர்த்தனை ஊக்குவிக்க "முதல்வருடைய விருது", என்ற விருதினை டிஜி தண் மேளா ஆரம்பித்த போது தொடங்கினர். இந்த விருது சிறப்பாக பணபரிவர்த்தனையில் செயலாற்றிய மாவட்டம் மற்றும் டிஜிட்டல் பணபரிவர்த்தனை பற்றிய கல்வி எடுத்துரைப்பதிற்காக வழங்கப்படுகிறது. இதில் வெற்றி பெறும் மாவட்ட துணை ஆணையருக்கு 2016-2017 நிதி ஆண்டின் இறுதியில் மார்ச் 31, 2017 பிறகு ரூ 50,000 பரிசு வழங்கப்படும்.

**54. "The Island of Lost Girls" என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?**

A. கிரண் தோஷி
B. அனில் மேனன்
C. மஞ்சுளா பத்மநாபன்
D. ஹன்ட்ச சோவென்ற சேகர்

**விடை: C. மஞ்சுளா பத்மநாபன்**

மஞ்சுளா பத்மநாபன் எழுதிய "The Island of Lost Girls" என்ற புத்தகத்தில் மெய்ஜி என்ற பெண் மூலம், எல்லா பெண்களும் எவ்வாறு பட்டிகாட்டுதனமாகவும், அறியாமைகளாகவும் மாறுகின்றனர் என்பதை குறிப்பிட்டுள்ளார்.

**55. எந்த ஆன்லைன் பயண போர்டல் இந்தியாவின் முதல் சமூக சொகுசு பயண பத்திரிகையான "Luxury Travel Times"யை வெளியிட்டு உள்ளது?**

A. Cleartrip
B. Goibibo
C. Ixigo
D. MakeMyTrip

**விடை: D.MakeMyTrip**

இந்தியாவின் முதலாவது சமூக சொகுசு பயண பத்திரிகை "Luxury Travel Times" ஆனது MakeMyTrip என்ற நிறுவனத்தால் தொடங்கபட்டது. இந்த கைபேசி பத்திரிக்கை மூலம் பயணிகள் தங்களது பயணத்தை சிறப்பாக செலவிடலாம். இது Facebook Canvas மற்றும் Instagram கதைகள் போன்றதாகும்.

**56. சமீபத்தில் காலமான மேரி டைலர் மூர், எந்த நாட்டின் பிரபல எம்மி விருது பெற்ற நடிகை?**

A. அமெரிக்கா
B. நார்வே
C. போர்ச்சுகல்
D. பிரான்ஸ்

**விடை: A. அமெரிக்கா**

மேரி டைலர் மூர் வயது 80, இவர் எம்மி விருது பெற்ற அமெரிக்க நடிகை. சமீபத்தில் அமெரிக்காவில் கிரீன்விச்சில் காலமானார். இவர் சிறந்த தொலைக்காட்சி கலைஞர் என்பது 1960 இல் நடைபெற்ற சிட்காம் டிக் வான் டைக் நாடகம் மற்றும் 1970 இல் நடைபெற்ற மேரி டைலர் மூர் நாடகம் போன்றவற்றில் அவரது தொலைக்காட்சிப் பாத்திரங்களின் மூலம் அறியப்பட்டது. சமூக பணி மற்றும் பல்வேறு அரசியல், விலங்கு உரிமைகள் மற்றும் நீரிழிவு பிரச்சினைகள் போன்ற சமுதாய நிகழ்வுகளில் ஆர்வம் காட்டினார்.

**57. காவல்துறை ரோந்து நடமாட்டத்தை கண்காணிக்க "Beat Marshall Monitoring Mobile App" எனப்படும் செயலியை எந்த நகர போலீஸ் அறிமுகப்படுத்தினர்?**

A. போபால் நகர போலீஸ்
B. ஷில்லாங் நகர போலீஸ்
C. ஹைதெராபாத் நகர போலீஸ்
D. புனே நகர போலீஸ்

**விடை: D. புனே நகர போலீஸ்**

காவல்துறை ரோந்து நடமாட்டத்தை கண்காணிக்க "Beat Marshall Monitoring Mobile App" எனப்படும் செயலியை புனே நகர போலீஸ் அறிமுகப்படுத்தினர். இந்த செயலி அனைத்து ரோந்து பணியாளர்களின் கைபேசியிலும் பதிவு செய்யபட்டிருக்கும் அவர்களது ரோந்து இருப்பிடம் மற்றும் அவர்களது இயக்கம் கட்டுப்பட்டு அறையில்

உள்ள பணியாளர்களால் கண்காணிக்கப்படும். சேகரிக்கப்பட்ட தகவல் அவசரத்தின் போது பயனுள்தாகவும் அவசர காலங்களில் பணியாளர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கவும் கண்காணிக்கப்படும்.

**58. ஜெர்மனியின் டாப் டிவிஷன் கால்பந்து லீக் "Bundesliga" பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள Lalchungnunga எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?**

A. மிசோரம்
B. நாகாலாந்து
C. திரிபுரா
D. அருணாசலப் பிரதேசம்

**விடை: A. மிசோரம்**

கடந்த ஆறு ஆண்டுகளாக ஜெர்மனியின் டாப் டிவிஷன் கால்பந்து லீக் "Bundesliga" பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள Lalchungnunga, மிசோரம் மாநிலத்தை சேர்ந்தவர். லல்சுஞ்னுங்க மிசோரம் மாநிலத்தை சேர்ந்த சிறப்பான கால்பந்து விளையாட்டு வீரர் ஆவார். இவர் டாடா அறக்கட்டளையில் கால்பந்து பயிற்சி பெற்றார். உள்ளூர் விளையாட்டு திறமைகளை அதிகரிக்க டாடா அறக்கட்டளை மற்றும் மிசோரம் அரசு இடையே ஒரு சிறப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

**59. 2017 T-20 பார்வையற்றோர்க்கான உலகக் கோப்பை கிரிக்கெட் எந்த நாட்டின் மூலம் நடத்தப்படுகிறது?**

A. இந்தியா
B. தென் ஆப்ரிக்கா
C. இங்கிலாந்து
D. நியூசிலாந்து

**விடை: A. இந்தியா**

ஜனவரி 29 முதல் பிப்ரவரி 12, 2017 வரை நடக்க உள்ள T20 பார்வையற்றோர்கான உலகக் கோப்பை கிரிக்கெட்டை இந்தியா நடத்த உள்ளது. இந்தியா மட்டுமின்றி பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, வங்காளம், இங்கிலாந்து, நேபால், நியூசிலாந்து, தென் ஆப்ரிக்கா, இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் போட்டிகளில் பங்குகொள்ள இருக்கின்றன. முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர்கள் மற்றும் கேப்டன் ராகுல் டிராவிட் போட்டிகளுக்கு தூதராக இருப்பார்கள். இந்த நேரத்தில், டிராவிட் "ஒரு கிரிக்கெட் பந்தை வாங்குவதன் மூலம் பார்வையற்றோர்க்கான கிரிக்கெட் நடத்தபடும்" என்ற கருத்தினை கூறியுள்ளர். மாணவர்கள் மற்றும் பொதுமக்கள்

பார்வையற்றோருக்கான கிரிக்கெட் உதவிக்காக www.blindcricket.in என்ற ஆன்லைன் மூலம் ஒரு கிரிக்கெட் பந்தை வாங்கி உதவி செய்யலாம்.

**60. வீர செயல் புரிந்ததற்காக வழங்கப்படும் "அசோக் சக்ரா" விருது 68 வது சுதந்திர தினத்தன்று யாருக்கு வழங்கப்பட்டது?**

A. நிற்பே சிங்
B. ஹார்ப்ரீத் சாந்து
C. ஹேங்பன் தாதா
D. கபில் யாதவ்

**விடை: C. ஹேங்பன் தாதா**

வீர செயல் புரிந்ததற்காக வழங்கப்படும் "அசோக் சக்ரா" விருது 68 வது சுதந்திர தினத்தன்று தன்னலமற்ற பொதுநல அக்கரையோடு பணிபுரிந்த ஹேங்பன் தாதாவிற்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியல் வழங்கப்பட்டது. மே 2016 அன்று ஜம்மு& காஷ்மீர் உள்ள நாக்ஹும் பகுதியில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார். இந்த விருதினை அவரது மனைவி சசென் லோவங் பெற்று கொண்டார்.

## நடப்பு நிகழ்வுகள்: ஜனவரி 27 - 2017

**61. எந்த மாநிலத்தில்"துலாரி கன்யா" திட்டத்தின் வழியாக குழந்தை இறப்பை குறைக்க மத்திய அரசு முயற்சி மேற்கொள்கிறது?**

A. அருணாசலப் பிரதேசம்
B. இமாசலப் பிரதேசம்
C. மத்தியப் பிரதேசம்
D. ஆந்திரப் பிரதேசம்

**விடை: A. அருணாசலப் பிரதேசம்**

ஜனவரி 26, 2017 அன்று 68வது குடியரசுதின விழாவில் அருணாச்சல பிரதேச அரசு குழந்தை இறப்பை குறைக்க "துலாரி கன்யா" எனும் திட்டத்தை அறிமுகம் செய்து உள்ளது. இத்திட்டப்படி, அரசு மருத்துவமனையில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு ரூ.20,000 அந்த குழந்தை பெயரில் வங்கி கணக்கில் செலுத்திவிடும், அக்குழந்தை18 வயது அடையும் பட்சத்தில் இதனை வட்டியுடன் சேர்த்து பெற்று கொள்ளலாம்.

**62. 2017 ஆண்டுக்கான இந்திய தொழில் கூட்டமைப்பின் (சிஐஐ) கூட்டு உச்சி மாநாடு பின்வரும் எந்த மாநிலங்களில் தொடங்கப்பட்டு உள்ளது?**

A. தெலுங்கானா
B. ஆந்திரப் பிரதேசம்
C. கர்நாடகம்
D. தமிழ்நாடு

**விடை: B. ஆந்திரப் பிரதேசம்**

2017 கூட்டமைப்பின் (சிஐஐ) கூட்டு உச்சி மாநாடு ஜனவரி 27 ம் தேதி அன்று விசாகப்பட்டினம், ஆந்திர பிரதேச மாநிலத்தில் தொடங்கியது. இதில் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் அடைவது பற்றி விவாதிக்கப்பட்டது. 2 நாள் நடைபெற்ற மாநாட்டில், 51 நாடுகளில் இருந்து சுமார் 2,000 பிரதிநிதிகள் பங்கு பெற்றனர்.

**63. எந்த மாநில அரசு,1894 ஆண்டு விவசாயிகளின் தியாகங்களை கருத்தில் கொண்டு அவர்களுக்கு அஞ்சலி செலுத்த விவசாயி தியாகிகள் நாள் ஏற்பாடு செய்துள்ளது?**

A. ஒடிசா
B. மணிப்பூர்
C. அசாம்
D. திரிபுரா

**விடை: C. அசாம்**

தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்த முதல் முறையாக, அசாம் அரசு விவசாயிகள் தியாகிகள் நாள் தர்றாங் மாவட்டத்தில் பதுருகாட்டில் ஜனவரி 27, 2017 அன்று ஏற்பாடு செய்துள்ளது. 1894 ஆண்டு பதுருகாட்டில் விவசாயிகள் செய்த தியாகத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்காக ஏற்பாடு செய்துள்ளது. 2 நாள் நடைபெறும் நிகழ்ச்சியில், பல்வேறு பயிற்சி திட்டங்கள், கண்காட்சிகள், கருத்தரங்குகள் இடம் பெற உள்ளன. மேலும் அசாம் முதல்வர் சர்பனட சொனோவேல் இதில் 22 சிறந்த விவசாயிகளுக்கு விருதுகளை கொடுக்கவும் உள்ளார். 28 ஜனவரி 1894 இல்,பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் நிலவரி அடக்குமுறை எதிராக எதிர்ப்பு உயர்ந்த போது 140 அப்பாவி விவசாயிகள் படுகொலை செய்யப்பட்டனர் மற்றும் 150 பேர் காயமடைந்தனர். இந்த விவசாயிகள், இந்தியாவின் சுதந்திர போராட்டத்தின் முன்னோடிகளாக மற்றும் பிரிட்டிஷ் கொடுங்கோன்மைக்கு எதிராக திகழ்ந்தனர்.

**64. இந்தியாவின் முதல் தபால் அலுவலக பாஸ்போர்ட் சேவா கேந்திரா எந்த நகரத்தில் தொடங்கபட்டுள்ளது?**

A. மைசூரு
B. சென்னை
C. கொச்சி
D. கவுகாத்தி

**விடை: A. மைசூரு**

இந்தியாவின் முதல் தபால் அலுவலக பாஸ்போர்ட் சேவா கேந்திரா (POPSK) கர்நாடகாவின் மைசூரு தலைமை தபால் அலுவலகத்தில் ஜனவரி 25, 2017 அன்று திறந்து வைக்கபட்டுள்ளது. PSKs அடிப்படையில் தொடர்புடைய எல்லா பாஸ்போர்ட்களும் வழங்க ஏற்பாடு செய்துள்ளது. இது POPSK என பெயர் சூட்டப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சகத்துடன் (வெளியுறவு) அஞ்சல் அலுவலகங்கள் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் மூலம் நெட்வொர்க் பாஸ்போர்ட் தொடர்பான சேவைகளை வழங்க அஞ்சல் துறை முடிவு செய்துள்ளது. POPSK நோக்கம் எல்லா பகுதிக்கும் பாஸ்போர்ட் சேவைகளை விரிவு படுத்துதல் மற்றும் வெளிநாடு பயணம் குறித்த செயல்முறைகளை எளிமைப்படுத்தல் ஆகும்.

**65. அமெரிக்க பத்திரிகையில் வெளியிட்ட, “Eight Great Powers of 2017” என்ற தலைப்பில் இந்திய பெற்றுள்ள இடம்?**

A. 6
B. 8
C. 7
D. 5

**விடை: A. 6**

American foreign policy, எனும் அமெரிக்க பத்திரிகையில் வெளியிட்ட, “Eight Great Powers of 2017”என்ற தலைப்பில் இந்திய 6வது இடத்தை பெற்றுள்ளத்து. அமெரிக்க முதலிடத்தில் உள்ளது அதை தொடர்ந்து சீனா மற்றும் ஜப்பான் இரண்டாவது இடத்தில் உள்ளது. ரஷ்யா (4வது), ஜெர்மனி (5 வது), ஈரான் 7 வது இடத்தில் உள்ளது மற்றும் இஸ்ரேல் 8 இடத்தில் உள்ளது.

**66. 2017 ஆண்டுக்கான பத்ம ஸ்ரீ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள சேகர் நாயக் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?**

A. பூப்பந்து
B. மல்யத்தம்
C. குத்துச்சண்டை
D. கிரிக்கெட்

**விடை: D. கிரிக்கெட்**

இந்திய பார்வையற்ற கிரிக்கெட் அணியின் கேப்டன் சேகர் நாயக் 2017 ஆண்டுக்கான பத்ம ஸ்ரீ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். பத்ம ஸ்ரீ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஜனவரி 29 முதல் பிப்ரவரி 12 வரை 10 நாடுகள் பங்குபெறும் 2 வது டி 20 பார்வையற்றோர் கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டியை நடத்த இந்தியா திட்டமிட்டுள்ள நிலையில் அவருக்கு இந்த மரியாதை கிடைத்துள்ளது.

**67. இந்தியா முழுவதும் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க எந்த துறை “தேசிய தொழில் முனைவோர் விருது” வழங்க ஏற்பாடு செய்துள்ளது?**

A. திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகம்
B. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்
C. உள்நாட்டு அமைச்சகம்
D. புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கம் அமைச்சகம்

**விடை: A. திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகம்**

திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் (MoSDE ) இந்தியா முழுவதும் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க "தேசிய தொழில் முனைவு விருதுகள்" வழங்க ஏற்பாடுசெய்துள்ளது. இந்த விருதுகள் இளம் தொழில் முனைவோர்கள் மற்றும் அவர்களின் தொழில் சூழலில் முன்னேற்றம் அடைந்தவர்களுக்கு வழங்கபடுகிறது. ஜனவரி 30,2017 அன்று நடைபெற்ற நிகழ்வில், 11 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டன. சிறப்பு விருந்தனராக, மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வருகை தந்திருந்தார். இது இந்திய இளைஞர்களில் தொழில் முனைவோர்களை முன்னிலைப்படுத்த மற்றும் ஊக்குவிக்க வழங்கப்படும் சிறந்த விருதாக கருதபடுகிறது.

**68. 2016 ஆண்டுக்கான ஊழல் குறியீட்டில் இந்தியா பெற்றுள்ள இடம்?**

A. 66
B. 82
C. 79
D. 112

**விடை: C. 79**

2016 ஆம் ஆண்டுக்கான ஊழல் குறியீட்டில்(CPI) இந்தியா வது79 இடத்தை பெற்றுள்ளது. 176 நாடுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் பேர்லின் நாட்டு ஊழல் கண்காணிப்பு அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் இந்தியா 79 வது இடத்தை பெற்றுள்ளது. டென்மார்க் மற்றும் நியூசிலாந்து முதலிடத்தில் உள்ளது. அதை தொடர்ந்து பின்லாந்து, ஸ்வீடன் மற்றும் சுவிச்சர்லாந்து உள்ளது. இதில் 100 மதிப்பெண் என்றால் ஊழல் அற்றதாகவும் 0 என்றல் ஊழல் நிறைந்ததாகவும் எடுத்து கொள்ளபடும். குறியீட்டுகளை வரிசை படுத்த உலக வங்கி தரவு மற்றும் உலக பொருளாதார அரங்கு (WEF) உதவின.

**69. எந்த மாநில அரசு சமீபத்தில் மே 2017 முதல் பாலிதீன் பைகளை முழுவதும் தடை செய்ய அறிவித்துள்ளது?**

A. சத்திஸ்கர்
B. மத்திய பிரதேசம்
C. ராஜஸ்தான்
D. குஜராத்

**விடை: B. மத்திய பிரதேசம்**

மத்தியப் பிரதேசம் முதல்வர், சிவராஜ் சிங் சவுகான் சமீபத்தில் பாலிதீன் பைகளை மாநில முழுவதும் மே 1, 2017 முதல் தடை செய்ய அறிவித்துள்ளார். சுற்றுசூழல் பாதுகாப்பதற்காக மற்றும் மாடுகளைப் பாதுகாப்பதற்காகவும் இதனை செயல்படுத்த உள்ளார். இதனை 68வது குடியரசு தினத்தன்று அறிவித்தார்.

**70. 2016 ஆண்டுக்கான தேசிய "புவிசார் அறிவியல் விருது" புவிசார் சுற்றுசூழல் துறையை சேர்ந்த யாருக்கு வழங்கபட்டது?**

A. அசோக் குமார் சிங்வி
B. P.V. ஜோசப்
C. விஷ்ணு தியோ சாய்
D. கேஷவ் கிருஷ்ணா

**விடை: D. கேஷவ் கிருஷ்ணா**

டாக்டர் கேஷவ் கிருஷ்ணா, தேசிய புவியமைப்பியல் ஆய்வு நிறுவன(NGRI), துறையில் விஞ்ஞானியாக பணியாற்றிவருகிறார். சுரங்க அமைச்சகம் சார்பில் 2016 தேசிய ஜியோசைன்ஸ் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். தற்போது, கிருஷ்ணா தொழில்துறை பகுதிகளில் மண், சக்தி, சுற்றுச்சூழல் பேரிடர், கன உலோக மாசு மற்றும் நீர், கைவிடப்பட்ட சுரங்க ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளார். மேலும் இவரோடு

தேசிய புவியமைப்பியல் ஆய்வு நிறுவன (NGRI) தலைமை விஞ்ஞானியான புர்ணசந்திர ராவ் தேசிய ஜியோசைன்ஸ் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## நடப்பு நிகழ்வுகள்: ஜனவரி 28, 29 - 2017

**71. யார் அருணாச்சல பிரதேச மாநிலத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்?**

A. பன்வரிலால் புரோகித்
B. ஷெட்டி
C. பி.பி. ஆச்சார்யா
D. கிரிஷன் காந்த் பால்

**விடை: C. பி.பி. ஆச்சார்யா**

மேகாலயா மற்றும் அருணாச்சல பிரதேச ஆளுநராக பதவி வகித்து வந்த சண்முக நாதன் புகாரின் காரணமாக தனது பதவியை ராஜினாமா செய்தார். குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி அவரது பதவி விலகலை ஒப்புக்கொண்டுள்ளார். இதன் காரணமாக நாகலாந்து மாநில ஆளுநராக பதவி வகித்து வந்த பி.பி. ஆச்சார்யா தற்போது அருணாச்சல பிரதேச ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் அசாம் மாநில ஆளுநராக பதவி வகித்து வந்த பன்வரிலால் புரோகித் மேகாலயா ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த இரண்டு ஆளுநர் நியமனங்களும் கூடுதல் பொறுப்பு வகிக்க உருவாக்கப்பட்டுள்ளன.

**72. "இந்திய மருத்துவம் மற்றும் மருத்துவ உபகரண கண்காட்சி 2017" எந்த நகரத்தில் நடைபெற்றது?**

A. சென்னை
B. கொல்கத்தா
C. கவுகாத்தி
D. பெங்களூரு

**விடை: D. பெங்களூரு**

இரண்டாவது சர்வதேச "இந்திய மருத்துவம் மற்றும் மருத்துவ உபகரண கண்காட்சி" மருத்துவ துறையின் கீழ் பெங்களூருவில் நடத்தப்பட்டது.
இதன் குறிக்கோள் "பொறுப்பான சுகாதாரம்" என்பதாகும். பிப்ரவரி 11 முதல் 13 2017 வரை இந்த மாநாடு நடைபெற்றது. இந்த 3 நாள் மாநாட்டின் கருப்பொருள்கள் இந்தியா பார்மா துறையில் எதிர்கால மருத்துவ சாதனங்களை "சரியாக தீர்மானித்து

வடிவமைப்பது" என்பதாகும். இதன் மூலம் இந்திய மருத்துவ முதலீட்டாளர்கள் உலக சந்தைக்கு நிகராக போட்டியிட முடியும்.

**73. 2017 ஆஸ்திரேலிய ஓபெனில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் கோப்பை வென்றவர் யார்?**

A. Simona Halep
B. Serena Williams
C. Venus Williams
D. Angelique Kerber

**விடை: B. Serena Williams**

அமெரிக்காவை சேர்ந்த தொழில்முறை டென்னிஸ் விளையாட்டு வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் 2017 ஆஸ்திரேலிய ஓபெனில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் கோப்பை வென்றுள்ளார். இவர் இறுதி போட்டியில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட தனது தங்கை வீனஸ் வில்லியம்சை 6-4, 6-4 என்ற கணக்கில் வென்று 23 வது முறையாக கோப்பையை தட்டி சென்றார். இதனால் 22 கோப்பை வென்ற ஸ்டெபி க்ராப்சின் சாதனையை முறியடித்துள்ளார். இன்னும் ஒரு போட்டியில் வெல்லும் பட்சத்தில் 24 கோப்பையை வென்ற மார்கரெட் கோர்ட் சாதனையை முறியடிப்பார்.

**74. பிரம்ம புத்திர இலக்கிய திருவிழா முதன் முதலாக எந்த நகரத்தில் கொண்டாடப்பட்டது?**

A. கவுகாத்தி
B. ஷில்லாங்
C. கொல்கத்தா
D. புவனேஸ்வர்

**விடை: A. கவுகாத்தி**

ஜனவரி 28, 2017 அன்று முதன் முதலாக அஸ்ஸாம் மாநிலம் கவுகாத்தியில் பிரம்ம புத்திர இலக்கிய திருவிழா கொண்டாடப்பட்டது. இதன் மூலம் வாசிப்போருக்கும் எழுத்தாளர்களுக்கும் இடையே கருத்து பரிமாற்றத்தை ஏற்ப்படுத்த முடியும். இந்த திருவிழாவானது மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் தேசிய புத்தக அமைப்பு(NBT) மற்றும் அஸ்ஸாம் மாநில அரசு இணைந்து நடத்த திட்டமிடப்பட்டது. இது மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் பிரகாஷ் ஜவடேகரால் தொடங்கி வைக்கப்பட்டது.

3 நாள் நடக்கும் இந்த விழாவில் 60 குழு விவாதங்கள், புத்தக வெளியீடுகள், கலாச்சார நிகழ்வுகள், இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள், திரைப்படங்களின் திரையிடப்படுதல் உள்ளிட்டவை இடம்பெறும். மேலும் 10 நாடுகளில் இருந்து 16 புத்தக எழுத்தாளர்கள் பங்கு பெறுகின்றனர்.

**75. "C25" என்ற உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் கிரையோஜெனிக் ராக்கெட் எஞ்சினை இஸ்ரோ எந்த எவுகளத்தில் சோதித்தது?**

A. GSLV-Mark-II
B. GSLV-Mark-IV
C. GSLV-Mark-V
D. GSLV-Mark-III

**விடை: D. GSLV-Mark-III**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் இஸ்ரோ "C25" என்ற உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் கிரையோஜெனிக் ராக்கெட் எஞ்சினை GSLV-Mark-III என்ற எவுகளத்தில் வெற்றிகரமாக சோதனை செய்தது. இந்த சோதனை தமிழ்நாட்டில் மகேந்ராகிரியில் நடத்தப்பட்டது. இந்த எஞ்சினில் குறைந்த வெப்பநிலையில் அதாவது 20 கெல்வினில் (-253 டிகிரி C) திரவ ஹைட்ரஜன் (LH2) ப்ராபெலன்ட் ஆகவும், 80K மேல் (-193 டிகிரி C) திரவ ஆக்ஸிஜன் (LOX) பயன்படுத்தி எரிவாயு ஜெனரேட்டர் சுழற்சியும் நடைபெறும். இந்த ராக்கெட் மூலம் நான்கு டன் எடையுள்ள பொருட்களை சுமந்து செல்லமுடியும்.

**76. நாளந்தா பல்கலைகழகத்தின் புதிய வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A. விஜய் பட்கர்
B. ஜோர்ஜ் யோ
C. சுகட்ட போஸ்
D. ஜி எஸ் ரெட்டி

**விடை: A. விஜய் பட்கர்**

பீகார் மாநிலத்தில் ராஜ்கிரில் உள்ள நாளந்தா பல்கலைகழகத்தின் புதிய துணை வேந்தராக இந்தியா சூப்பர் கணினியின் தந்தை என்றழைக்கப்படும் விஜய் பட்கர் நியமிக்கப்பட்டுள்ளார். நாளாந்த பல்கலைகழக வேந்தர் நியமன விதி 11(3)ன் படி மூன்று ஆண்டுகளுக்கு இந்த பதவியை வகிப்பார். இதற்கு முன்னர் கோபா சபர்வால் இந்த பதவியை வகித்து வந்தார். இவரின் பதவி விலகலை அடுத்து கட்டுப்பாட்டு குழு பல்கலைகழகத்தின் பொறுப்புகளை நிர்வகிக்கிறது.

**77. 2017 ஆம் ஆண்டிற்கான "Ophthalmology Hall of Fame" என்ற விருதுக்கு தேர்வாகியுள்ள இந்திய மருத்துவர் யார்?**

A. சி பி தாகூர்
B. குல்லப்பள்ளி என் ராவ் [ Gullapalli N Rao ]
C. இலட்சுமணசாமி முதலியார்
D. அரூப் சட்டர்ஜி

**விடை: B. குல்லப்பள்ளி என் ராவ்**

ஹைதெராபாத்தில் உள்ள எல்வி பிரசாத் கண் மருத்துவமனையின் நிறுவனரும், தலைவருமான குல்லப்பள்ளி என் ராவ் [ Gullapalli N Rao ] American Society of Cataract and Refractive Surgery (ASCRS) நிறுவனத்தால் வழங்கப்படும் 2017 ஆம் ஆண்டிற்கான "Ophthalmology Hall of Fame" என்ற விருதுக்கு தேர்வாகியுள்ளார். அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல் நகரில் மே 6, 2017 அன்று நடைபெறும் விழாவில் சிறப்பிக்கப்படுகிறார். இவர் தற்போது மதிப்புமிக்க Ophthalmologica அகாடமியின் தலைவராக பதவி வகிக்கிறார். இதில் உலகெங்கும் இருந்து சிறந்த 80 மருத்துவர்கள் இடம்பெற்றுள்ளனர். இதற்கு முன்னர் சர்வதேச பார்வை இழப்பு தடுப்பு அமைப்பின் தலைவராக இருந்துள்ளார்.

**78. 2020 மற்றும் 2024 ஒலிம்பிக் போட்டிகளுக்கு சிறந்த தடகள வீரர்களை கண்டுபிடிக்க மத்திய அரசின் கீழ் அமைக்கப்பட்ட " ஒலிம்பிக் இலக்கு மேடை" என்று அழைக்கப்படும் குழு?**

A. Anjali Bhagwat குழு
B. Karnam Malleshwari குழு
C. Abhinav Bindra குழு
D. Prakash Padukone குழு

**விடை: C. Abhinav Bindra குழு**

மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் நல அமைச்சகம் "ஒலிம்பிக் இலக்கு மேடை" என்ற திட்டத்தின் மூலம் நல்ல பதக்கம் வெல்லும் திறமை கொண்ட தடகள வீரர்களை கண்டறிந்து 2020 மற்றும் 2024 ஒலிம்பிக் போட்டிகளுக்கு பயிற்சியளிக்க செய்ய குழுவை அமைத்துள்ளது. இந்த குழுவின் தலைவராக ஒலிம்பிக்கில் தங்க பதக்கம் வென்ற அபிநவ் பிந்த்ர நியமிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் ஒரு வருடகல இடைவெளியில் சிறந்த வீரர்களை கண்டறிந்து உலக தரத்திலான பயிற்சிகள் வழங்கப்படும்.

**79. சமீபத்தில் இந்திய அரசு எந்த நாட்டுடன் வெள்ளை கடல் ஒப்பந்தத்தை கையெழுத்திட்டுள்ளது?**

A. பிரேசில்
B. சீனா
C. பிரான்ஸ்
D. ஜெர்மனி

**விடை: C. பிரான்ஸ்**

இந்திய பெருங்கடல் பகுதியில் கடல்வழி மற்றும் கடல்வழி போக்குவரத்து தொடர்பான விவரங்களை பகிர்ந்து கொள்ள பிரான்ஸ் நாட்டுடன் இந்திய வெள்ளை கடல் ஒப்பந்தத்தை கையெழுத்திட்டுள்ளது. சீனா கடல் பரப்பில் தன் ஆதிக்கத்தை செலுத்தி வரும் நிலையில் இந்த ஒப்பந்தம் மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியாவும் பிரான்சும் இணைந்து இந்திய-பசும்பிக் கடல் பகுதியில் கடற்பயிற்சிகளை மேற்கொள்ளும். இது ஒரு கடல் பாதுகாப்பு அரணாக செயல்பட இருக்கிறது.

**80. சமீபத்தில் காலமான சார் ஜான் ஹுர்ட் என்ற புகழ்பெற்ற நடிகர் எந்த நாட்டை சேர்ந்தவர்?**

A. இங்கிலாந்து
B. அமெரிக்கா
C. பிரான்ஸ்
D. சீனா

**விடை: A. இங்கிலாந்து**

இங்கிலாந்து நாட்டை சேர்ந்த சார் ஜான் ஹுர்ட் என்ற புகழ்பெற்ற நடிகர் ச்ரோமேர் என்ற இடத்தில் காலமானார். இவர் மிட்நைட் எக்ஸ்பிரஸ் (1978), ஏலியன் ஹாரி பாட்டர் பட தொடர் (2001-11), ஹெல்பாயில் படங்கள் (2004-2008) மற்றும் டிங்கர் டெய்லர், சோல்ஜர் ஸ்பை போன்ற படங்களின் மூலம் மிகவும் பிரபலம் அடைந்தார். ஏலியன் படத்தில் இறுதி காட்சியில் அவரது கதாப்பாத்திரம் சினிமா வரலாற்றில் மறக்க முடியாத ஒன்றாக அறியப்படுகிறது.

## நடப்பு நிகழ்வுகள்: ஜனவரி 30 - 2017

**81. 2017 ஆண்டுக்கான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் வென்றுள்ளவர் யார்?**

A. ரோஜர் பெடரர்
B. ரபேல் நடால்
C. ஆண்டி முர்ரே
D. ரோவர் டிஜோகொவிக்

**விடை: A. ரோஜர் பெடரர்**

சுவிஸ் நாட்டின் சிறந்த டென்னிஸ் வீரரான ரோஜர் பெடரர் 2017 ஆண்டுக்கான மெல்போனில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் வென்றதன் மூலம் தனது18 வது கோப்பையை வென்றுள்ளார். ஸ்பெயினை சேர்ந்த ரபேல் நடாலை,6-1, 3-6, கணக்கில் தோற்கடித்துள்ளார். 2012க்கு பிறகு பெற்ற முதல் பெரிய வெற்றியாகும். கிராண்ட் ஸ்லாம் தொடரில் அதிக போட்டியில் வென்ற இரண்டாவது வீரர் பெடரர் என்பது குறிப்பிடதக்கது.

**82. தேசிய நோய்த்தடுப்பு தினம் இந்தியாவில் எந்த தேதியில் கொண்டாடப்படுகிறது?**

A. ஜனவரி 28
B. ஜனவரி 29
C. ஜனவரி 30
D. ஜனவரி 27

**விடை: B. ஜனவரி 29**

ஜனவரி 29 அன்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, தேசிய எதிர்ப்பு(NID) தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் போலியோ மருந்து திட்டத்தை அறிமுகம் செய்துள்ளார். ஜனவரி 29 அன்று நடைபெற்ற விழாவில் ஐந்து வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு இத்திட்டம் பொருந்தும் என்று கூறியுள்ளார். நாட்டில் போலியோ இல்லாத நிலையை தக்க வைத்துக் கொள்ளும் வகையில் ஐந்து வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு இதனை அறிமுகம் செய்துள்ளார்.

**83. 2017 ஆண்டுக்கான சையத் மோடி கிராண்ட் பிரிக்ஸ் கோல்டு பாட்மின்டன் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் வென்றுள்ள வீரர்?**

A. சாய் ப்ரநீத்
B. ஸ்ரீகாந்த் கிடம்பி
C. சமீர் வர்மா
D. காஷ்யப் பருபள்ளி

**விடை: C. சமீர் வர்மா**

சமீர் வர்மா, இந்தியவை சேர்ந்த பாட்மின்டன் வீரர் ஆவர். இவர் உத்தரப்பிரதேசத்தில் உள்ள பனரசிதாஸ் உள் விளையாட்டரங்கில் சாய் ப்ரநீத்தை 21-19, 21-16 என்ற கணக்கில் இறுதி ஆட்டத்தில் தோற்கடித்து 2017 ஆண்டுக்கான ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சையத் மோடி கிராண்ட் பிரிக்ஸ் கோல்டு பாட்மின்டன் விருதை வென்றுள்ளார். இதை தவிர, ஒலிம்பிக்கில் வெள்ளி பதக்கம் வென்ற பி.வி.சிந்து இந்தோனேஷியாவை சேர்ந்த கிரேகோரியா மரிச்கவை 21-13, 21-14 என்ற கணக்கில் தோற்கடித்து தனது முதல் மகளிர் ஒற்றையர் கிரீடத்தை வென்றுள்ளார். அது மட்டுமன்றி மேலும் கலப்பு இரட்டையர் இறுதிப்போட்டியில் பிரணவ் ஜெர்ரி சோப்ரா மற்றும் என் சிக்கி ரெட்டி 22-20 21-10 என்ற கணக்கில் இறுதி ஆட்டத்தில் சகஅஸ்வினி பொன்னப்பா மற்றும் பி சுமீத் ரெட்டி ஆகியோரை தோற்கடித்ததன் மூலம் இந்தியா இரட்டை பட்டம்
வென்றுள்ளது.

**84. இந்திய தபால் கொடுப்பு வங்கியின் இடைக்கால நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

A. சீமா. பிஸ்வாஸ்
B. குப்தா நிஹர்
C. எஸ்ஆர் ரெட்டி
D. AP சிங்

**விடை: D. AP சிங்**

இந்திய தபால் சேவை அதிகாரியாகவும், இந்தியா தபால் கொடுப்பு வங்கியின் இடைக்கால நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்க்கு முன்னதாக, அவர் முதலீடு துறை மற்றும் பொது சொத்து மேலாண்மை (DIPAM) கூட்டு செயலாளராக இருந்தார். இந்திய தனித்துவ அடையாள அட்டை ஆணையதில் UIDAI (Unique Identification Authority of India). நிதி சேர்ப்பதற்காக மற்றும் கட்டணம் அமைப்புகளில் துணை இயக்குனராக பணியாற்றினார். IPPBயானது சமீபத்தில் இந்தியா ரிசர்வ் வங்கியின் வணிக முறைகளை நடைமுறைபடுத்த அமைக்கப்பட்டு உள்ளது. பணம் அனுப்பும் சேவைகள் மற்றும் குறிப்பிட்ட சேவைகளை ஏற்று நடத்த உள்ளது. இதில் தனிநபர் கணக்கில் 1 லட்சம் வரை வைப்பு வைத்து கொள்ளமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**85. உலகின் முதலாவது டிஜிட்டல் தூதர் எந்த நாட்டில் உருவாக்கப்பட்டு வருகிறது?**

A. டென்மார்க்
B. இந்தியா
C. போர்ச்சுகல்
D. மலேஷியா

**விடை: A. டென்மார்க்**

டென்மார்க் ஆனது டிஜிட்டல் தூதுவரை உருவாக்கியுள்ளது. இது கூகுள், ஆப்பிள், IBM மற்றும் மைக்ரோசாப்ட் போன்ற உலக தொழில்நுட்ப நிறுவனங்களில் முக்கிய பங்குவகிக்கும். இந்த புதிய முறை தொழில்நுட்ப பிணைப்புகள் மூலம் தனியாருக்கு சொந்தமான தொழிற்சங்கங்கள் இடையே ஒரு தூதரக அதிகார மாற்றத்தினை பிரதிபலிக்கும் என்று எதிர்பார்க்கபடுகிறது.

**86. 2017 ஆண்டுக்கான தொழுநோய் எதிர்ப்பு தினத்தையொட்டி எந்த தேசிய தொழுநோய் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மத்திய அரசு ஏற்பாடு செய்து வருகிறது?**

A. சமரத் பிரச்சாரம்
B. சாத் பிரச்சாரம்
C. ஸ்பர்ஷ் பிரச்சாரம்
D. சந்தேஷ் பிரச்சாரம்

**விடை: C. ஸ்பர்ஷ் பிரச்சாரம்**

தொழுநோய் எதிர்ப்பு தினத்தையொட்டி நாடு தழுவிய ஸ்பர்ஷ் பிரச்சாரம் " ஜனவரி 30ல் கொண்டாடப்பட்டது. தொழுநோய் பாதிக்கப்பட்ட மக்களை பேணிய மகாத்மா காந்தி நினைவாகவும் அவரது தியாக மற்றும் தன்னலமற்ற செயல்களின் நினைவாக ஜனவரி 30ம் தேதி ஒவ்வொரு வருடமும் கடைபிடிக்கபடுகிறது. இதன் முக்கிய நோக்கமாக ஆரம்பகட்டத்திலேயே தொழுநோய் நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை இவற்றில் சமுதாயப் பங்களிப்பினை ஊக்குவிப்பது ஆகும். தொழுநோய் மைக்ரோபாக்டீரியம் லேப்ரே எனும் பாக்டிரியாவால் ஏற்படும் தொற்று நோய். இது பொதுவாக தோல் மற்றும் நரம்புகளை பாதிக்கிறது. ஸ்பர்ஷ் பிரச்சாரத்தின் முக்கிய நோக்கமாக குழந்தைகள் தொழுநோய் தொடர்பான குறைபாடுகள் பூஜ்யமாக இருக்க வேண்டும் என கவனம் செலுத்துகிறது. உலக தொழுநோய் தினம் ஜனவரி மாத கடைசி ஞாயிறன்று அனுசரிக்கப்படுகிறது.

**87. 2017ஆம் ஆண்டிற்க்கான வட கிழக்கு திரைப்பட விழா (NEFFf) பின்வரும் நகரங்களில் எங்கு தொடங்கப்பட்டது?**

A. கவுகாத்தி
B. ஷில்லாங்
C. கொல்கத்தா
D. புனே

**விடை: D. புனே**

வட கிழக்கு திரைப்பட விழா வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் சினிமாவை ஊக்குவிக்க மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் உள்ள தேசிய திரைப்பட காப்பகம் மூலம் தொடங்கப்பட்டது. இதன் நோக்கமானது சர்வதேச திரைப்பட தயாரிப்புகளின் ஒத்துழைப்புகளை ஆராய மற்றும் வடக்கு கிழக்கு பகுதியில் இருந்து வரும் இளம் மற்றும் வளர்ந்து வரும் படத் தயாரிப்பாளர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதாகும். மற்றொரு நோக்கமாக IFFI கலந்து கொள்ளவும், வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் தொடர்பு ஏற்படுத்தி கொள்ளுதல் மற்றும் வடகிழக்கு படங்களில் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் போன்றவை ஆகும்.

**88. 2016 ஆண்டுக்கான மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை வென்ற ஐரிஸ் மிட்டனேர் எந்த நாட்டை சார்ந்தவர் ?**

A. ஹெய்ட்டி
B. பிரான்ஸ்
C. கொலம்பியா
D. நார்வே

**விடை: B. பிரான்ஸ்**

ஜனவரி 30, 2017 அன்று பிலிப்பைன்ஸ் உள்ள மணிலாவில் நடைபெற்ற உலக அழகி போட்டியில் பல் மருத்துவரான பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஐரிஸ் மிட்டேனர் 2016 ஆண்டுக்கான உலக அழகியாக தேர்ந்தெடுக்கபட்டார். பிரான்சில் இருந்து வந்த 2 வது அழகியாவார். இதற்க்கு முன்னர் 1953ல் கிறிஸ்டியன் மார்டெல் அழகியாக தேர்ந்தெடுக்கபட்டார்.

**89. "Mother Teresa: The Final Verdict" என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?**

A. நிதின் போஸ்
B. ரித்திக பட்டாச்சார்யா
C. அரூப் சட்டர்ஜி
D. கனிஷ்கா குப்தா

**விடை: C.அரூப் சட்டர்ஜி**

“Mother Teresa: The Final Verdict”புத்தகம் அரூப் சட்டர்ஜி என்பவரால் எழுதப்பட்டது. இவர் பிரிட்டிஷ் இந்திய எழுத்தாளர் மற்றும் மருத்துவர் ஆவர். இந்த புத்தகத்தில் கொல்கத்தா (முன்னர் கல்கத்தா) நகரின் புகழை சேதப்படுத்தாமல் அன்னை தெரேசா குற்றம், தொண்டு மற்றும் சுயநலமின்மையின் சின்னமாக எவ்வாறு திகழ்ந்தார் என்பது பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**90. தில்லி போலீஸில் புதிய ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளவர்?**

A. நீரஜ் குமார்
B. அலோக் குமார்
C. ஒய் எஸ் தட்வல்
D. அமுல்யா பட்நாயக்

**விடை: D. அமுல்யா பட்நாயக்**

1985ஆண்டு பிரிவை சேர்ந்த ஐபிஎஸ் அதிகாரியான அமுல்யா பட்நாயக் தில்லி போலீஸில் புதிய ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன் இருந்த அலோக் குமார் மத்திய புலனாய்வு (சிபிஐ) துறையில் புதிய தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## நடப்பு நிகழ்வுகள்: ஜனவரி 31 - 2017

**91. ஆப்பிரிக்க ஒன்றியத்தின் (AU) புதிய தலைவராக யார் நியமிக்கப்பட்டுள்ளார்?**

A. ஜீன் பிங்
B. நோகொசானோ ஜுமா
C. தாமஸ் கோர்டே
D. மூசா பாகி

**விடை: D. மூசா பாகி**

முன்னாள் பிரதமராகிய மூசா பாகி, ஆப்பிரிக்க ஒன்றிய ஆணையத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நோகொசானோ ஜுமாவை எதிர்த்து வெற்றி பெற்றுள்ளார். ஆப்பிரிக்க ஒன்றியம் (AU), ஒன்றியத்தின் நிர்வாக கிளை அல்லது செயலகமாக செயல்பட உள்ளது. இதன் தலைமையகம் அடிஸ் அபாபா, எத்தியோப்பியாவில் அமைந்துள்ளது.

**92. இந்திய பொருளாதார ஆய்வறிக்கை (ஈஎஸ்ஐ) 2017 படி, இந்தியா மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி சதவிதம்?**

A. 6.55 - 7.25
B. 6.25 -7.5
C. 6.55 -7.25
D. 6.75 -7.5

**விடை: D. 6.75 -7.5**

2016-2017, ஆண்டிற்கான பொருளாதார அறிக்கை நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சர் அருண் ஜேட்லி தாக்கல் செய்தார். இதன்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.75% முதல் 7.5% வரை வகையில் இருக்கும். நடப்பு நிதியாண்டில் (2016-17) தொடர்ந்து சந்தை விலையில் மொத்த உள்நாட்டு வளர்ச்சி விகிதம் 7.1% ஆக இருக்க திட்டமிட்டுள்ளது. இது பொது துறையில் உள்ள தனியார்மயமாக்கல் சிரமங்களை உயர்த்தி காட்டுகிறது. மேலும் சிவில் மற்றும் விமான போக்குவரத்து, வங்கி, உரத்துறை போன்றவை தனியார் மையமாக்கல் குறித்து விவாதித்து வருகிறது. நிதியமைச்சகத்தின் முதன்மைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியன் இந்த அறிக்கையை தயாரிக்க உள்ளார்.

**93. இந்தியா கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பிசிசிஐ) புதிய தலைவராக யார் நியமிக்கப்பட்டுள்ளார்?**

A. டயானா எடுளிஜி
B. விக்ரம் லாமையே
C. வினோத் ராய்
D. ராகுல் ஜோஹ்ரி

**விடை: C. வினோத் ராய்**

உச்ச நிதி மன்ற உத்தரவு படி முன்னால் மத்திய கணக்கு மற்றும் இந்திய ஆடிட்டர் ஜெனரல் (CAG)வினோத் ராய் தற்போது கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 4 பேர் கொண்ட குழுவிற்கு தலைமை தாங்குவார். இவரது குழு முன்னாள் பெண்கள் கிரிக்கெட் அணியின் கேப்டன் டயானா எடுளிஜி, வரலாற்றாசிரியர் ராமச்சந்திர குஹா மற்றும் IDFC தலைமை நிர்வாக அதிகாரி விக்ரம் லமையா ஆகியோரை கொண்டுள்ளது. இது தவிர, இந்திய கிரிக்கெட் வாரியத்தின் அமிதாப் சவுத்ரி மற்றும் விக்ரம் லமையா ஆகியோர்

பிப்ரவரி 2017 அன்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) கூட்டத்தில் இதனை விளக்க உள்ளனர்.

**94. சமீபத்தில் காலமான நன்கு அறியப்பட்ட நடிகை எம்மானுள்ள ரிவா எந்த நாட்டை சேர்ந்தவர்?**

A. ஜெர்மனி
B. இங்கிலாந்து
C. அமெரிக்கா
D. பிரான்ஸ்

**விடை: D. பிரான்ஸ்**

எம்மானுள்ள ரிவா (89) ஹிரோஷிமா மன் அமூர் படங்களில் சிறந்த கதாபாத்திரங்கள் மூலம் பிரபலமானவர். சமீபத்தில் பிரான்ஸில் உள்ள பாரிஸில் காலமானார்.

**95. பின்வரும் எந்த மாநிலத்தில் இந்தியாவின் மிகப்பெரிய தொடக்க காப்பகம் (இன்குபட்டர்) அமைய உள்ளது?**

A. மேற்கு வங்க
B. தெலுங்கானா
C. ஆந்திரப் பிரதேசம்
D. கர்நாடகம்

**விடை: D.கர்நாடகம்**

இந்தியாவின் மிகப்பெரிய தொடக்க காப்பகம் கர்நாடகா மாநிலம் பெங்களுருவில் உள்ள ஹுப்பாலியில் இருந்து சுமார் 400km தூரத்தில் குருராஜ் தேஷ்பாண்டே அவர்களின் மூலம் அமைய உள்ளது. தேஷ்பாண்டே இந்திய - அமெரிக்க தொழிலதிபர் மற்றும் கொடையாளி ஆவர். இந்த திட்டத்தின் நோக்கம் உள்ளூர் சமூகத்தில் இருந்து வரும் பிரச்சனை தீர்வுவாளர்களை ஊக்குவிக்க மற்றும் மேலாண்மை துறை ஆகியவற்றில் பங்கு பெற செய்ய அடித்தளமாக இருந்து அவர்களுக்கு உதவிடும் ஒரு தொடக்கமாகும். இதை தவிர உலக கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் அவர்களுடனான இணைப்புகளை அனுமதிக்கும் களமாகவும் செயல்படும். செப்டம்பர் 2017 அன்று 82,000-சதுர அடியில் திறக்கபட உள்ளது. 1,200 மக்கள் அமரும் இருக்கை கொண்டு குறைந்த பட்சம் 200 நபர்களை கொண்டு தொடக்க இன்கியிபட்டர் அமைய உள்ளது. தற்போது இந்தியாவின்

மிகப்பெரிய காப்பகம் தெலுங்கானாவில் உள்ள டி மையம் ஆகும், இது 70,000 சதுர அடி கட்டிடத்தில் அமைந்து உள்ளது.

**96. எந்த மாநில சுற்றுலா துறை அதன் “வீட்டில் தங்கம் திட்டம்” எனும் திட்டத்தை ஊக்குவிக்க ஆன்லைன் பயண நிறுவனமாகிய "மேக்மைட்ரிப்” உடன் இணைந்து உள்ளது?**

A.ராஜஸ்தான்
B.மத்தியப் பிரதேசம்
C.ஒடிசா
D.அசாம்

**விடை: B. மத்தியப் பிரதேசம்**

மத்தியப் பிரதேச மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (MPSTDC) அதன் “வீட்டில் தங்கம் திட்டம்” ஊக்குவிக்க ஆன்லைன் பயண நிறுவனமான "மேக்மைட்ரிப்" உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது. மேக்மைட்ரிப் ஆனது மத்தியப் பிரதேச சுற்றுலா துறைக்கு பெரிதும் உதவும் வகையில் இந்த ஏற்பாடு செய்துள்ளது.

**97. “The man who could never say No” என்ற புத்தகம் யாரால் எழுதபட்டது?**

A. என்.என் சக்சேனா
B. விக்ரம் சேத்
C. எஸ் முத்தையா
D. கோபாலகிருஷ்ணா காந்தி

**விடை: C. எஸ் முத்தையா**

“The man who could never say No” என்ற புத்தகம் புகழ் பெற்ற வரலாற்றாசிரியரான எஸ் முத்தையா அவர்களால் படைக்கபட்டது. இதன் கதையானது பிரபல தொழிலதிபர் டி டி கிருஷ்ணமாச்சாரியின் கடைசி மகன் டி டி வாசு என்பவரை பற்றியது.

**98. டிஜிட்டல் ரேடியோ வட்டமேஜை மாநாடு எந்த மத்திய அமைச்சர் வழியாக மேற்கொள்ளப்பட்டது?**

A. அருண் ஜேட்லி
B. ராஜ் நாத் சிங்
C. எம்.வெங்கையா நாயுடு

D. நரேந்திர மோடி

**விடை: C. எம்.வெங்கையா நாயுடு**

தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை அமைச்சர் வெங்கையா நாயுடு மூலம் டிஜிட்டல் ரேடியோ வட்டமேஜை மாநாடு தொடங்கப்பட்டது. இதனை டிஜிட்டல் ரேடியோ மோன்டில்(டிஆர்எம்) பொறியியல் ஆலோசகர்கள் மற்றும் இந்தியா லிமிடெட் (BECIL) உதவியிடன் நடத்தியது. மாநாட்டின் நோக்கமானது இந்தியாவில் டிஜிட்டல் ரேடியோ மூலம் இந்திய பங்குதாரர்களின் நலன்களை அதிகரிக்கலாம் என்பதாகும்.

**99. கீழ்க்கண்ட எந்த ஆபரேஷன் மூலம் வருமானவரித் துறை பண மதிப்புகளை குறைக்கும் செயல் முறைகளை கண்காணிக்க ஏற்பாடு செய்துள்ளது?**

A. Operation Track Black Money
B. Operation Clean Money
C. Operation Clean Deposits
D. Operation Track Money

**விடை: B. Operation Clean Money**

வருமானவரித் துறை Operation Clean Money மூலம் பண மதிப்புகளை குறைக்கும் செயல் முறைகளை கண்காணிக்க ஏற்பாடு செய்துள்ளது. முதல் கட்ட நிலையாக நவம்பர் 9 ஆம் டிசம்பர் 30 2016 வரை e-சரிபார்ப்பு மூலம் அதிக பண வைப்பு உள்ளவர்களை அடையாளம் காணப்பட்டு உள்ளனர். இதில் சுமார் 18 லட்சம் கணக்குகள் சரியான வருமான கணக்குகளுடன் பொருந்தவில்லை. இது வரி செலுத்துபவர்களின் குறைகளை குறைக்க ஆன்லைன் முறையை கொண்டுவந்துள்ளது. இது தொடர்பான செய்திகளை இ பில்லிங் மற்றும் https://incometaxindiaefiling.gov.in இணையதளத்தில் சென்று PAN கார்ட் மூலம் அதில் உள்ளே சென்று தகவல்களை அறியலாம். வரி செலுத்துபவர்கள் அலுவலகத்திற்கு நேரடியாக செல்லம், செல்லமலேயே தங்களது குறைகள் மற்றும் தகவல்களை பெறலாம்.

**100. ராஜீவ் காந்தி தேசிய விண்வெளி பல்கலைகழகம் எங்கு தொடங்க உள்ளது?**

A. ஆந்தர பிரதேசம்
B. தெலுகனா
C. உத்தரபிரதேசம்
D. மத்தய பிரதேசம்

**விடை: C. உத்தரபிரதேசம்**

ராஜீவ் காந்தி தேசிய விண்வெளி பல்கலைக்கழகம் (RGNAU) உத்தரப் பிரதேசம் புர்சட்கங் உள்ள பரேலியில் அமைந்துள்ள தன்னாட்சி பல்கலைக்கழகம் ஆகும். பிப்ரவரி 2 அன்று முதல் RGNAU ஆனது அமெரிக்க-இந்திய ஒத்துழைப்பு திட்டங்களை அமல்படுத்த உள்ளது. இத்திட்டத்தில் விமான போக்குவரத்து துறை நிபுணர்கள் மூலம் பல தலைப்புகளில் விவாதம் நடத்தபட உள்ளன. அவையாவன, விமான திட்டமிடல், விமான போக்குவரத்து பரிமாற்ற நிர்வாகம், பாதுகாப்பு போன்றவையாகும். இதில் மூத்த அறிஞர்கள் மூலம் தொழில் துறையில் சமீபத்திய தகவல்கள் பற்றி அறிய உதவும். மேலும் இந்திய விமான போக்குவரத்து துறை வளர்ச்சி வாய்ப்புகள், சவால்கள் மற்றும் கருத்துக்கள் போன்றவற்றை பற்றி பகிர நல்ல தளமாக இருக்கும்.